Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 20 ரூபா • தீபம் 29 • 07.02.2016

வடக்கின் கட்டடக்கலையில்
பாரிய புரட்சியை ஏற்படுத்தி கொண்டிருக்கும்
HARI
ENGINEERS & CONTRACTORS
CONTACT US
+94 77 2830694



கவிப்பேரரசு வைரமுத்து அண்மையில் வடக்கிற்கு வந்திருந்தார். முல்லைத்தீவில் வைரமுத்துவின் உணர்வுபூர்வ பேச்சு சமூகவலைத்தளங்களில் பலநாட்கள் காட்டுத்தீயாக பற்றிப்பரவி வைரல் ஹிட்டடித்தது. நம்மவர்கள் பலர் கைத்தொலைபேசி 'ரிங்ரோன்' ஆக வைரமுத்துவின் பேச்சை வைத்துக்கொள்ளும் அளவிற்கு பேச்சிருந்தது.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## வைரமுத்து ஏன் வந்தார்?

### அதிர்ச்சி பின்னணி

எக்ஸ்ரே ரிப்போர்ட்



சுமார் 400 வருடங்களிற்கும் மேலாக செழிப்புடன் விளங்கிய யாழ்ப்பாண ராசதானியின் வாரிசு ராஜா ரெமீஜியஸ் கனகராஜா. நல்லூரை இராசதானியாக ஆரியச்சக்கர வர்த்தி மற்றும் யாழ்ப்பாண அரசர்களின் பரிபாலனம்

தொடர்ச்சி 20-ம் பக்கம்

## தமிழர்களின் வாழ்வை மீட்டெடுப்பேன்

சூளுரைக்கிறார் யாழ்ப்பாண மகாராஜா



காணாமல் போகும் மட்டக்களப்பு வாவி
6



அடுத்த சங்கக்கார ரெடி
16



எல்லோரும் என்பிள்ளையை கைவிட்டு விட்டீர்கள்
21

# வாய்களிற்கிடையில் பாலம் அமைப்போம்!

மாலபே தனியார் மருத்துவ பல்கலைகழகத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் அரச பல்கலைகழக மருத்துவ மாணவர்கள் அண்மைய நாட்கள் வரை தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வந்தனர். மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியும், ஏனைய மருத்துவக்கல்லூரிகளும் தகுதியற்ற வைத்தியர்களை உருவாக்கிவிடும் என்பது அவர்களின் தொடர்ச்சியான வலியுறுத்தல்.

இதேவிதமான கோரிக்கைகளுடன் வடக்கு, கிழக்கிலும் மருத்துவ மாணவர்கள் போராடினார்கள். அரச பல்கலைகழக மருத்துவ மாணவர்களின் வலியுறுத்தல்களை ஒரேயடியாக புறந்தள்ளிவிட முடியாது. வளப்பற்றாக்குறை, தரச் சிக்கல், அதிக மாணவர்கள் என தனியார் பல்கலைகழகங்கள் பக்கத்தில் நிவர்த்தி செய்ய வேண்டிய நிறைய விடயங்கள் உள்ளன.

என்றாலும் இந்த விவகாரத்தில் இருவிதமான பார்வைகளிற்கான அத்தனை வாய்ப்புக்களும் உள்ளன. தனியார் பல்கலைகழகங்கள் தொடர்பாக அரச பல்கலைகழக மாணவர்கள் அதாவது நாளைய வைத்தியர்கள் நிறைய குற்றச்சாட்டுக்களை வைத்துள்ளனர். மகத்தான சேவையை விலைபேசி விற்றுவிடாதீர்கள் என அவர்கள் ஒரு பதாகையும் பிடித்தனர்.

விரைவாக தனியார் மயப்படும் துறைகளில் ஒன்றாக வைத்தியம் மாறி பல ஆண்டுகளாகிவிட்டது. அதிகம் பணங்கொழிக்கும் வர்த்தகமாக வைத்தியம் மாறிவிட்டது. இதுபற்றி சில வாரங்களின் முன்னர் தீபத்திலும் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

இதன்பின்னர் தமிழ் வைத்தியத்துறையினரிடம் குறிப்பிடத்தக்க அதிருப்தி தீபம் தொடர்பில் எழுந்ததை அவதானித்தோம். சில வைத்தியசாலைகள் தீபத்திற்கு தடைவிதித்தன. யாழ்.போதனா வைத்தியசாலை தீபத்தை அங்கே விநியோகிக்க வேண்டாமென அறிவித்தது. இன்னொரு தரப்பு தீபம் தொடர்பில் விசமப்பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

அதிகாரமையங்கள் எல்லாக்காலங்களிலும் அப்படித்தான் சிந்திக்கும். அதற்கு மாறாக சிந்தித்தால்த்தான் ஆச்சரியம். மக்களின் குரலை எதிரொலிக்கும், ஊடகஅறத்தை கைவிடாமல் சமூகத்தில் நிலவும் குறைகளை வெளிச்சமிடும் பத்திரிகைகளின் கழுத்தில் விழும் பதக்கமாலைகளாகத்தான் இந்தவகையான எதிர்ப்புக்களை கொள்ள வேண்டும். வைத்தியத்துறையின் மறுபக்கத்தை வெளிச்ச மிட்டபோது அதனை எதிர்கொள்ள வைத்தியர்கள் பலர் சிரமப்படுவதன் அர்த்தம் என்ன? யாரும் கேட்காதவரை, நம்மைநாமே கேள்வி கேட்காதவரையில் அப்படி செயற்படுவோம் என்ற சுய சமாதானமா?

தமிழர்கள் மத்தியிலுள்ள பிரபல்யமான வைத்தியர்களில் அனேகர் தனியார்துறையிலும் கடமையாற்றுபவர்கள்தான். எல்லாத்துறை களையும்போல வைத்தியத்திலும் தனியார்துறையை தவிர்க்க முடியா தென ஒரு வாதத்திற்கு வைத்து கொள்ளலாம். ஆனால், தனியார் துறை மட்டுமே இயங்க வேண்டுமென்பது என்ன வகையான நியாயம்?

அரசவைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு செல்பவர்களிடம் தனியார்துறை பற்றிய சாதக அபிப்பிராயங்களை உருவாக்குவதில் வைத்தியர்களின் பங்கு அளப்பரியது. அரசவைத்தியசாலைகளில் காத்திருக்க வேண்டும், சீறிவிழுவார்கள், வைத்தியர்கள் கதைக்க மாட்டார்கள் போன்ற அபிப்பிராயங்கள் சாதாரண சனங்கள் மத்தியில் பரவலாக உள்ளது. அரசவைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற பலர், தமது நோய் தொடர்பான மேலதிக விளக்கங்களை பெற அரச வைத்தியசாலையில் சிகிச்சையளித்த வைத்தியரை சந்தித்து தனியார் வைத்தியசாலைக்கு செல்வது சாதாரண நிகழ்வு.

அரசவைத்தியத்துறை நிதானமாக தன்னை சுயபரிசீலனை செய்து கொள்ள நிறைய விடயங்கள் உள்ளன. விமர்சனங்களை கண்டு ஒளிவதோ, தாக்குதல் நடத்துவதோ பலனற்றவை. ஒருமுறை கண்களை திறந்து கொண்டு கண்ணாடிக்கு முன்னால் வருவதே வைத்தியத்துறையை மீட்டெடுக்க வழி.

அதேபோல, தமது உரிமைகள் பற்றிய தெளிவும் விளக்கமும் மக்களிற்கு அவசியம். அரச சேவையான வைத்தியத்தை முழுமையாகவும், தெளிவாகவும் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு குடிமகனிற்கும் உரித்துள்ளது. தனக்கு வழங்கப்படும் சிகிச்சை, நோயின் தன்மை பற்றிய முழுமையான விளக்கத்தை வைத்திய சாலைகளில் பெற்றுக்கொள்வது அத்தியாவசியம். ஏனெனில், அரசவைத்தியசாலைகளில் நோய்க்காக சிகிச்சை பெற செல்பவர்கள் பலரிற்கு தமது நோய், சிகிச்சைமுறை, பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய முழுமையான விளக்கம் கிடைப்பது குறைவு. சரியான சிகிச்சை வழங்கப்பட்டாலும், அந்த தகவல்களை பெற்றுக்கொள்வது அங்கு செல்பவர்களின் அத்தியாவசிய கடமை.

வைத்தியர்களிற்கும் நோயாளர்களிற்கிடையிலும் உறவுப்பால மொன்று அமைப்பதுதான் இந்த சர்ச்சைகளை கடக்க எளியவழி.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633

சந்தா : subs@deepam.lk
ஆசிரியர் பீடம் : editor@deepam.lk
விளம்பரம் : sales@deepam.lk
வேலைவாய்ப்பு : hr@deepam.lk
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**மஹிந்த சமரசிங்க (அமைச்சர்)**

போர்க் குற்றச்சாட்டுகள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவான விசாரணை நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு வேண்டியதில்லை. இதற்கு ஒரு போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பங்களிப்பு வழங்காது. தேசிய அரசாங்கத்தின் கீழ் முன்னெடுப்பட்டு வரும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பில் இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து தெளிவுப்படுத்த வேண்டியது அவசியம்.



**ராஜித சேனாரத்ன (அமைச்சர்)**

அப்பாவிகள் என்ற வேஷம் போடுவதனால் செய்த குற்றங்களை மறைக்க முடியாது. ராஜபக்ஷமார் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள விடயங்கள் மட்டுமல்ல கடந்த ஆட்சியில் நடந்த அனைத்து மோசடிகளையும் கண்டறிவதுடன் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவர். எமது ஆட்சியில் ஜனநாயகத்தை மீறும் வகையில் எந்த செயற்பாடுகளும் அமையவில்லை. குற்றம் புரிந்த காரணத்தினால் தான் குற்றவாளிகள் என்ற அடிப்படையில் நபர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். கடந்த ஆட்சியில் மோசமான வகையில் நிதி மோசடிகள் மற்றும் சொத்து குவிப்பு போன்ற வழக்குகளில் யோஷித்த ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் மட்டுமல்ல மேலும் பலரும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.




**உதய கம்மன்பில (பிதுரு ஹெல உறுமய)**

சுதந்திரதினத்தில் தமிழில் தேசியகீதம் பாடுவது தேசிய பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் செயலாகும். தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடவேண்டுமாயின் முதலில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும். தேசிய கீதம் இயற்றப்பட்ட காலம் தொட்டு தேசிய கீதத்தின் தமிழாக்கமும் உள்ளது. ஆனால் அது உத்தியோகபூர்வமானது அல்ல. எமது நாட்டில் தேசிய கீதம் இருமொழிகளில் பாடப்பட்டால் எமது தேசியமும் பிளவுபடும் என்பதை மறுப்பதற்கில்லை.



**மஹிந்த ராஜபக்ஷ (குருணாகல் எம்.பி)**

தவறு செய்திருந்தால் தண்டனை அனுபவிக்கத் தயார். வெறுப்பை எமது குடும்பத்தார் மீது காண்பிக்க வேண்டாம். இன்னும் சில நாட்களில் என்னையும் அழைப்பர். நாமலையும் அழைப்பர். பஸில், மற்றும் கோத்தபாய ஆகியோரையும் அழைப்பர். நல்லாட்சியை சரியாக முன்னெடுக்க வேண்டுமல்லவா? இதன் காரணமாகவே ஏனைய விடயங்களுக்கு அவர்களுக்கு நேரம் இல்லாமல் போயுள்ளது.



**ரணில் விக்கிரமசிங்க (பிரதமர்)**

இலங்கையில் பொறுப்புக்கூறல் இல்லை என்றால் நல்லிணக்கம் சாத்தியமில்லை. நல்லிணக்கமின்றி பொறுப்புக் கூறல் சாத்தியமில்லை. நாட்டில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறுதலையும் ஏற்படுத்துவதே அரசின் முழுமையான அணுகுமுறையின் நோக்கமாகும். நாங்கள் இதற்கான முயற்சிகளையே மேற்கொண்டுள்ளோம். இலங்கை மக்கள், நாட்டில் மனித உரிமைகளை மீள ஏற்படுத்தி அதனை வலுப்படுத்துவதற்கான ஆணையை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளனர்.

# க்ளிக் பக்கம்

வேப்பங்குளம் கல்லாட்டியகுளம் விவசாய பண்ணையில் நடந்த கண்காட்சியில் எடுத்தது. மரக்கறி பயிர்களை கொண்டு உருவாக்கப்பட்ட பூங்கா. அடுக்கி வைத்த வரிசையாக வளர்ந்து நிற்கும் அழகே தனி.





**என்னைப்பற்றி:** நான் புரட்சிதாசன். வவுனியாவில் வசிக்கிறேன். நீண்டகாலமாக ஊடகத்தில் பணியாற்றி வருகிறேன்.




படப்பிடிப்பாளர்:
புரட்சிதாசன்
இடம்:
வவுனியா



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk

பொலிசார் என்றாலே 'ரெரராக' இருப்பார்கள் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். அப்படியல்ல, காக்கிச்சட்டைக்குள்ளும் மனிதம் உள்ளதென்பதை நிரூபித்துள்ளது இந்தக்காட்சிகள். களுத்துறையில் காதல்தோல்வியால் மனநலம் பாதித்தநிலையில் அலைந்து பல வருடங்களாக திரிந்த ஆசிரியரை (50 வயது) கண்ட பொலிஸ்அதிகாரி, மனநலம் பாதிக்கப்பட்டவரின் தலைமுடி, நகம் வெட்டி சுத்தப்படுத்தி, உணவு கொடுத்துள்ளார். பொலிசாரின் இந்த செயற்பாடு சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.






கடந்தவார கலக்கல்

தீபத்தின் சமூக ஊடகங்களில் கடந்த வாரம் அதிகம் பகிரப்பட்ட படம் இது. யாழ்ப்பாணத்தில் நடந்த சர்வதேச வர்த்தக கண்காட்சியில் 'தமிழ் கொசுவுசட்டை' என அறிமுகப்படுத்தப்பட்ட ரீசேர்ட். பார்வையாளர்களிடம் மட்டுமல்ல, இணையவாசிகளையும் 'தெறி'க்க வைத்தது.



‘உங்கள் திருமணத்தன்று
நான் எங்கிருந்தேன் ?’
மகளின் கேள்விக்கு
விடைகூற முயன்றேன்.
“அந்தத் தீயின்
நடுச்சுடராக ஒளிர்ந்திருந்தாய்.
எம் தலைமீது தூவப்பட்ட
அட்சதையில்
ஒரு மணியாக இருந்தாய்.
சூடிய மாலை நறுமணத்தில்
இருந்ததும் நீதான்.
தாத்தா பாட்டியரின்
கண்களில்
நீர்த்துளியாக நீ திரண்டு நின்றாய்.
உன் தாயைக் கரம்பற்றிய
என் உள்ளங்கைக்குள்
வெப்பமாக இருந்ததும்
நீயே...!”

\- மகுடேஸ்வரன்

Home



**www.facebook.com/mano.ganesan**

இந்த பல கட்சி அரசாங்கத்தில், மகிந்தவை சுற்றி வளைக்க, நாம் காய்களை கவனமாக நகர்த்த வேண்டியுள்ளது. இதற்குள்ளே, "உங்களுடைய அரசாங்கமும் கொடுத்த வாக்குறுதியை நிறைவு செய்யவில்லை" என்று வெளிநாட்டில் இருந்தபடி நம்மவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இவர்களுக்கு நான் சொல்வது இதுதான். "மகிந்த காலத்து பாவங்களைதான் இப்போது நாம் கழுவுகிறோம். இன்று காணாமல் போதல்கள், கடத்தல்கள், கைதுகள், படுகொலைகள் எதுவும் புதிதாக நிகழவில்லை என்பது எத்துனை நிம்மதி என்பதை இங்கே மீண்டும் வந்து வாழ்ந்து பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். மற்றப்படி இன்னமும் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன என்பதையும் நான் மறுக்கவில்லை. முன்னோக்கி படிப்படியாக நகர்கிறோம்.ஆனால், எங்களை அவசரப்படுத்தி, மீண்டும் மகிந்த வந்து விடும் நிலைமையை ஏற்படுத்தி விடாதீர்கள்".



**www.facebook.com/mynthan**

யோசிதவை தொடர்ந்து பெப்.4க்கு முன்பாக நாமலும் கைது செய்யப்படலாம் என்கிறார்கள். "நீதி"கிடைக்கின்றதென்ற உணர்வைத் தாண்டி, இவையெல்லாம் வெறும் அரசியல் ஸ்டண்டுகள்,"ஒருவருடத்தில் என்னத்த கிழித்தார்கள்?"என்று தங்கள் அபிமானிகள் கேட்கத் தொடங்கும்முன்பாக அவர்களை கொஞ்சம் அடக்கி வைக்க பூசப்படும் பட்டர்தான் இவையெல்லாம் என்று யோசிக்க வைக்கிறது. ஆனாலும்,காக்கவைத்து மகிந்த அதரவாளர்களின் ஆக்ரோஷத்தை குறைத்து ஒரு "சாதாரண கைது" என்று தெரியும்வகையில் நடத்தி முடித்திருப்பது "வாவ்!".நாமல் கைது நடந்தாலும் இப்படித்தான் நடக்கும்.ஒன்றும் தேவையில்லை; FCID விசாரணைனு கூப்பிட்டு, "Law படிச்சியே..ஒரு செமிஸ்டர்ல எத்தின subject"டா?"ன்னு கேட்டாப்போதும்.. மெரள மெரள முழிக்க,சிம்பிளா உள்ளதூக்கி போட்டிரலாம்..சும்மா எப்ப பாத்தாலும் கோர்ட்டு வாசல்ல கருப்பு சட்டை போட்டு காமெடி பண்ணிகிட்டு..!




**www.facebook.com/jeyaluxshan**

iOS அப்டேட் பண்றதும் பொண்ணுங்க சலூன் போறதும் ஒண்ணுதான்..
#எந்த_வித்தியாசமும்_தெரியாது



**www.facebook.com/mjmsharthaar**

இன்னைக்கு கங்காருகளுக்கு கக்கா போகுமாப்போலதான் இருக்கு!! அது ஏனோ அவுஸ்காரங்க அடிவாங்கும் போது நாம பட்ட காயத்துக்கு மருந்து தடவராப்பல இதமா இருக்கு!!!



**www.facebook.com/mmsmirsath**

பஸ்ல பக்கத்துல ஒரு பொண்ணு சிங்களத்துல பேசுது எனக்குத்தான் அவ கதைக்குரது புரியல ஊருக்கு வந்து முப்பது நாள் சிங்களம் படிக்கனும்

Like Comment Share



கருணா நிலைய அருட்தந்தை டானியலுடன் கிளிநொச்சி கரடி போக்கு பகுதியில் அமைந்துள்ள விகாரையின் பிக்கு, மற்றும் கந்தசுவாமி ஆலய ஜெகதீஸ்வர குருக்கள்,மௌலவி அர்சாத்.

இலவச நூல் வெளியீடு
வைத்தியக் கலாநிதி இ.தெய்வேந்திரன் எழுதிய
“சமகால சுகாதாரப் பிரச்சனைகளும்
அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளும்”
இவ்வெளியீட்டினைப் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல. 05,
பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :
021 222 2574

**1-ம் பக்க தொடர்ச்சி**

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடந்த உழவர்தின நிகழ்வில் 'வெடிமழையிலேயே கரைந்து போகாத தமிழர்கள் இந்த இடிமழையிலா கரைந்து போவார்கள்' என வைரமுத்து சொல்ல கூடியிருந்தவர்களின் கரகோச அதிர்வில் வானத்தில் சுடியிருந்த கருமேகங்கள் விலகிச் சென்றன என ஒருவர் கவிதையாக சொன்னார்.

வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சு நடத்திய உழவர்தின நிகழ்வில் கலந்து கொள்ளத்தான் வைரமுத்து வருகிறார் என இரண்டுநாளின் முன்னர் ஏற்பாட்டாளர்கள் ஊடகங்களிற்கு அறிவிக்க பரபரப்பு பற்றிக் கொண்டது. யுத்தம் முடிந்து கிட்டத்தட்ட ஆறரை வருடங்களின் பின்னர் வைரமுத்து வந்திருந்தார். யுத்தத்தின் பின்னர் தமிழகத்திலிருந்து பல அரசியல், சினிமா, சமய, இலக்கிய பிரபல்யங்கள் வந்திருந்தார்கள்தான்.





**'கப் பார்த்து கடா வெட்டுவது' என ஒரு நகைச்சுவை வசனம் உள்ளது. இதனை ஜெயலலிதா கச்சிதமாக செய்தார். கருணாநிதி தமிழர்களின் விரோதியாக, முன்னர் ஒரு காலத்தில் தமிழர்களுடன் நெருங்கியிராத ஜெயலலிதா ஈழத்தாயானார்.**

ஆனால் அப்பொழுதெல்லாம் இவ்வளவு பரபரப்பு கிளம்பியதில்லை. வன்னிச்சனம் மொத்தமாக மெனிக்பாம் முகாமிற்குள் அடைக்கப்பட்டிருந்த சமயத்தில் தமிழகத்திலிருந்து எம்.பிக்கள் குழு வந்திருந்தது. அப்பொழுது எல்லா ஊடகங்களிலும் அவர்கள் தலைப்பு செய்தியாக இருந்தார்கள். அதன்பின்னர் இப்பொழுது வைரமுத்துதான் அதிகம் பரபரப்பை பெற்ற தமிழக பிரபல்யம்.

வைரமுத்து போன இடங்களிலெல்லாம் அவருடன் போட்டோ எடுக்க, கையெழுத்து வாங்க பலர் முண்டியடித்ததை காண முடிந்தது. வைரமுத்துவை ஆட்கள் நெருங்க விடாமலிருப்பதில் ஏற்பாட்டாளர்கள் குறியாக இருந்தனர். குறிப்பாக பத்திரிகைக் காரர்கள் நெருங்குவதையோ, பேட்டி எடுப்பதையோ ஏற்பாட்டாளர்கள் அனுமதிக்கவில்லை. கண்ணிற்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு கண்காணித்தார்கள்.

**சும்மா ஆடாத சோலியன் குடுமி**

வைரமுத்து உழவர்விழாவிற்காக மட்டும் வரவில்லை. அதற்கு முன்னர் தெற்கின் சில நகரங்களில் நடந்த காலி இலக்கிய விழா 2015 இல் பிரமுகராக பெயரிடப்பட்டிருந்தார்.

இதன்பின்னர்தான் வடக்கிற்கு வந்தார். வடக்கிற்கு ஏன் வந்தேன் என வைரமுத்து முள்ளியவளையில் விளக்கம் கொடுத்திருந்தார். 'உங்களிற்கு ஆறுதல் சொல்ல வந்தேன். வாழ்வு இன்னும் முடியவில்லையென்ற நம்பிக்கையூட்ட வந்தேன்' என்றார்.

ஆனால் வைரமுத்து அதற்கு மட்டுமே வரவில்லை. விடயம் வில்லங்கமென்கிறார்கள் விடயமறிந்தவர்கள். கிடைக்கும் உள்வீட்டு தகவல்கள், அரசியலில் எப்படியெல்லாம் காய்கள் நகர்த்தப்படுகிறது என்ற அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது. அரசியல் சதுரங்கத்தில் சூழ்ச்சிகரமாக நகர்த்தப்படும் காய்கள் வெளியுலகத்தில் எப்படியான தோற்றத்தை கொடுக்கிறதென்பதற்கு இந்த சம்பவமும் ஒரு உதாரணம்.

தமிழகத்தை மையப்படுத்தி நடக்கும் பெரிய அரசியல் நகர்வின் ஒரு பகுதியே வைரமுத்துவின் வரவுடன் வடக்கில் நடந்துள்ளது, அதற்கு வடக்கு மாகாண சபையின் முக்கியஸ்தர்கள் சிலர் தெரிந்தோ தெரியாமலோ பங்காளிகளாகியுள்ளனர் என்பதே அந்த பரபரப்பு தகவல்.

தமிழகத்தில் மீண்டும் ஆட்சியை பிடிக்க பல்வேறு வடிவங்களில் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நகர்வுகளில் ஒன்றுதான் வைரமுத்துவின் வரவும் என்கிறார்கள்.

**கறை கூடாது**

இறுதியுத்தம் உக்கிரமடைந்திருந்த சமயத்தில் தமிழகத்தில் ஆட்சியிலிருந்தது மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு. மத்திய அமைச்சு பதவிகளையும் கைவசம் வைத்திருந்தது. மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசிற்கு திமுகவின் ஆதரவு கட்டாயமானதாக இருந்தது. அதனை பயன்படுத்தி கருணாநிதி ஏதாவது செய்வார் என சனங்கள் நம்பியிருந்தார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. முள்ளிவாய்க்காலில் சனங்களின் அபயக்குரலை திமுக காது கொடுத்து கேட்கவில்லையென்ற பழிச் சொல்லும் விழுந்தது.

கருணாநிதி எதுவும் செய்யாமலிருந்திருந்தால்கூட பரவாயில்லை, மெரீனா கடற்கரையில் காலைச்சாப்பாட்டிற்கும் மதியச் சாப்பாட்டிற்குமிடையில் மேடைபோட்டு உட்கார்ந்துவிட்டு, அதற்கு பெயர் உண்ணா விரதமென சொல்லி காமடி பண்ணியதுமல்லாமல், ஈழத்தில் போர்நிறுத்தம் ஏற்பட்டு விட்டதென கூறி எல்லோரது வயிற்றெரிச்சலையும் சம்பாதித்துக் கொண்டார்.

இந்தக்கறை தமிழகத்திலுள்ள ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் உள்ளது. இதனை இலகுவில் போக்க முடியாது. முன்னர் புலிகள் இருந்த சமயத்தில் அவர்களுடன் நட்பு கொண்டு, அவர்களின் நிகழ்வுகளிற்கு போனால் இப்படியான கறைகளை சுலபமாக அகற்றிவிடலாம். 2009 இன் பின்னர் அதற்கு வாய்ப்புக்கள் இல்லையே!

**தலையில் மண்ணள்ளி போட்ட திமுக**

இலங்கை விவகாரத்தில் திமுக பெயரை கெடுத்துக் கொண்ட அளவிற்கு தமிழகத்திலென்ன இந்திய அளவில் யாருமே பெயரை கெடுத்துக் கொள்ளவில்லை. சுப்ரமணியன் சுவாமி, சோனியா போன்றவர்களை மன்னித்தாலும் கருணாநிதியை மன்னிக்க முடியாதென்று இன்றும் சமூகவலைத்தளங்களில் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.





'கப் பார்த்து கடா வெட்டுவது' என ஒரு நகைச்சுவை வசனம் உள்ளது. இதனை ஜெயலலிதா கச்சிதமாக செய்தார். கருணாநிதி தமிழர்களின் விரோதியாக, முன்னர் ஒரு காலத்தில் தமிழர்களுடன் நெருங்கியிராத ஜெயலலிதா ஈழத்தாயானார். தமிழர் விவகாரத்தில் அவர் அடுத்தடுத் சிக்ஸர் அடித்தார். இனப்படுகொலை, சர்வதேச விசாரணை என சட்டப்பேரவை தீர்மானமாகட்டும், மகிந்தவை கண்டித்து வெளியிடும் 'பன்ஞ்' அறிக்கையாகட்டும் எல்லா விடயமும் தமிழர்களின் இதயங்களை தொட, கருணாநிதி பாடு திண்டாட்டமாகிவிட்டது.

ஆட்சிபீடமேறியதும் ஜெயலலிதா செய்த அதிரடி நடவடிக்கைகள் பல தமிழக மக்களிற்கும் பிடித்துப்போக, அதன்பின்னர் நடந்த சில தேர்தல்களிலும் ஜெயலலிதா வாக்குகளை அள்ளினார். இந்த நிலையித்தான் அடுத்த சட்டமன்ற தேர்தல் தமிழகத்தை நெருங்கி வரத் தொடங்கியுள்ளது.

இம்முறையும் ஜெயலலிதாவை அசைக்க முடியாதென்பதை போன்ற நிலவரங்கள்தான் இருந்தன எதிர்பாராத விதமான வெள்ளம் வரும்வரை!

### தோஷம் கழிக்க வந்தவர்

இம்முறை ஆட்சியை பிடிப்பதற்கு திமுக பெரும் பணத்தை இறைத்து, சகல வளங்களையும் பிரயோகித்து முயற்சிக்கிறது. மீண்டும் ஆட்சிக்கட்டிலேற திமுக நூற்றுக்கணக்கில் கோடிகளை கொட்டி முயற்சிப்பதாக தெரிகிறது. ஊடகங்களை வளைத்துப் போடுவது தொடக்கம் தலையில் காகம் எச்சமிட்டாலும் அதற்கு ஜெயலலிதாவின் அசன்டையீனம்தான் காரணமென சாதாரண சனங்களை நம்பவைப்பது வரை அனைத்தும் பக்காவாக நடக்கிறது.

தமிழகத்தின் முக்கிய ஊடகங்களை வளைத்துப்போட்டு பெரும் பிரசாரம் முடுக்கிவிட்டபோதுதான், தமிழகத்தை கடந்த வருடத்தில்வெள்ளம்புரட்டிப்போட்டுள்ளது. இதனை அரிய வாய்ப்பாக கருதும் திமுக எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி மீண்டும் ஆட்சிபீடமேறலாமென கணக்குப் பண்ணியுள்ளது. ஆட்சிபீடமேறுவதற்காக ஒவ்வொரு நகர்வையும் நுணுக்கமாக திட்டமிட்டு காரியமாற்றிவருகின்றனர்.

மீண்டும் ஆட்சிக்கு வருவனெனில் 'ஈழத்தமிழர் தோஷம்' கழிக்க வேண்டுமென்பது திமுகவிற்கு நன்றாகவே தெரியும். அதனை செய்ய யார் சரியானவர் என தேடியபோதுதான் வைரமுத்து கிடைத்துள்ளார்.

### டீலா? நோ டீலா?

வைரமுத்துவிற்கும் திமுகவிற்குமுள்ள தொடர்பு ஊரறிந்தது. கருணாநிதியின் இலக்கிய இளவல் வைரமுத்து.

வைரமுத்துவை வைத்து 'பரிகாரம்' தேடலாமென கட்சி நினைத்ததாக தகவல். வடக்கு மாகாணசபையின் விருந்தினர்களாக சென்றுவந்தாலே போதும், யாரும் கேள்வி கேட்க முடியாதென கட்சி நினைக்கிறது.

வைரமுத்துவின் 'பரிகார பயண'த்திற்காக பெரும் 'டீலே' நடந்ததாக கூறுகிறார்கள். வடக்கு மாகாணசபை பிரமுகர் ஒருவரிற்கு சில 'சந்தோசம்' கொடுத்தே காரியத்தை சாதித்துள்ளனர். மாகாணசபை பிரமுகரின் பிள்ளைகள் இருவரும் இந்தியாவில் இருக்கிறார்கள். திமுக பிரபலம் ஒருவருக்கு சொந்தமான பல்கலைகழகம் ஒன்றில் வழங்கப்பட்ட அனுமதிக்கு கைமாறே வைரமுத்துவின் பயணம் என்கிறார்கள் விடயமறிந்தவர்கள். அந்த பல்கலைகழகத்தில் அனுமதி பெற பெருமளவு பணம் தேவையான போதும், பிரபலத்தின் பிள்ளைகளிற்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வைரமுத்துவின் வரவாவது திமுகவின் தோஷத்தை கழிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.






திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி கடந்த வாரம் நடந்தது.







# காணாமல் போகும் மட்டக்களப்பு வாவி

## ஒரு 'குப்பை' ரிப்போர்ட்

வரதராஜன்

இலங்கையின் இரண்டாவது பெரிய வாவி மட்டக்களப்பு வாவி. மட்டக்களப்பு அழகின் பகிரங்க இரகசியம் வாவி. வாவியும் மட்டக்களப்பும் பிரிக்க முடியாத பௌதீக, வரலாற்று, வாழ்வியல் தொடர்பை கொண்டவை. மீன்பாடும் தேன்நாடு என்ற அடைமொழியெல்லாம் இதிலிருந்து உருவானவைதான்.

### மட்டக்களப்பு வாவியின் இன்றைய நிலை என்ன?

மனதை சங்கடப்படுத்தும் கேள்வியிது. வடக்கு, கிழக்கில் பெரும் வாழ்வாதார பிரச்சனையாக உருவெடுத்துள்ள முறையற்ற கழிவகற்றல் மட்டக்களப்பு வாவியையும் விட்டு வைக்கவில்லையென்பதே துயரம். வாவியின் சில இடங்களில் கொட்டப்படும் திண்மக் கழிவுகள் மொத்த வாவியையுமே காவு கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. திண்மக்கழிவுகள் நீரோட்டத்தை மட்டுமல்ல மனித வாழ்வின் உயிரோட்டத்தையே காவு கொண்டுவிடுமென்பதை வரலாறு எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தாலும் மனிதர்கள் அதை புரிந்து கொள்வதேயில்லை.

மட்டக்களப்பு வாவி பல்வேறு இடங்களில் அசுத்தம் செய்யப்பட்டு கொண்டிருந்தாலும், காத்தான்குடி எல்லையோரத்தில் கொட்டப்படும் கழிவுகளே வாவிக்கு உடனடி உலை வைப்பதாக உள்ளது.

காத்தான்குடி நகரசபையினாலும், பொதுமக்களாலும் காத்தான்குடி எல்லையில் வாவியோரமாக தினசரி கொட்டப்படும் பெருமளவு குப்பைகள்தான் வாவியின் சுத்தத்திற்கு தலையிடியை கொடுக்க ஆரம்பித்துள்ளது. ஆரையம்பதி மேற்கு கிராமப்பகுதியே இந்த குப்பை கொட்டலால் உடனடி பாதிப்பை சந்திக்கின்றது.

காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சேரும் அனைத்து விதமான கழிவுகளும் இங்கு கொட்டப்படுகின்றன. குப்பைகள், மிருக எலும்புகள், பொலித்தீன், மருந்துகள் என சூழலுக்கும், வாவியின் தூய்மைக்கும் கேடுவிளைக்கும் பொருட்கள் கொட்டப்படுகின்றன.

எங்கெல்லாம் முறையற்ற கழிவகற்றல் நடக்கிறதோ அங்கெல்லாம் மக்கள் சந்திக்கும் நெருக்கடிகளையும், ஆபத்துக்களையும் இந்தப்பகுதி மக்களும் சந்திக்கிறார்கள். குப்பைகளின் உடனடி ஆபத்து சுத்தமான நீர், காற்று கிடைக்காதது. இங்கும் அது நடக்கிறது.

முறையற்ற கழிவகற்றலால் அந்தப்பகுதியில் தொற்றுநோய்கள், தோல்நோய்கள் ஏற்படுகின்றன. அதுதவிர, வாவியின் மீன் வளத்திற்கும் பேராபத்தை விளைவிக்கலாமென அஞ்சப்படுகிறது. இந்தப்பகுதியில் மீன்கள் குறைந்து கொண்டு செல்வதாக பிரதேசத்தில் மீன்பிடிப்பவர்கள் குற்றம்சாட்ட ஆரம்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மிருகக்கழிவுகள் கொட்டப்படுவதால் ஏற்படும் உடனடி ஆபத்து முதலைகள். உணவிற்காக அங்கு காத்திருக்கும் முதலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. முதலைகளின் பெருக்கத்தால் வாவியில் மீன்பிடிப்பவர்கள்தான் பெரிய சவாலை சந்திக்கிறார்கள்.

ஆரையம்பதி மேற்கு கிராமத்தில் 2,500 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. அருகில் உருவாகிவரும் குப்பைமேட்டால் மொத்த குடும்பங்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. அந்தப்பகுதியின் குடிநீர் அசுத்தமடைந்து வருவதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். தாங்கள் அருந்தும் நீர் அசுத்தமாகி விட்டதென மக்கள் குற்றம் சுமத்துகின்றபோதும், இதுவரை அதிகாரிகள் முறையான ஆய்வுகள் எதையும் செய்யவில்லை. நீர் மாசடைந்திருந்தால் அதனை அருந்த வேண்டாமென அறிவுறுத்தி, மாற்று குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அல்லது, மக்களின் அச்சம் தவறானதெனில் அதனை புரியவைக்க வேண்டும். எதனையும் செய்யாமல் அதிகாரிகள் வழக்கம்போல மெத்தனமாக இருக்கிறார்கள்.

குப்பை கொட்டும் நகரசபை சாதாரண பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யவில்லையென்பதுதான் மக்களின் கடுமையான கோபத்திற்கு காரணம். நீரும் குப்பையும் சேருமிடங்களிலிருந்து வகைதொகையின்றி நுளம்பு பெருகி மொத்த ஊரையும் மொய்க்கின்றபோதும், நகரசபை கண்ணைமூடியிருக்கிறது. நுளம்புகளை கட்டுப்படுத்த முறையான செயற்றிட்டம் அதிகாரிகளிடம் இல்லாததால் மக்கள்தான் உடலை சொறிந்து கொண்டு இருக்கிறார்கள்.

மழைக்காலங்களில் வாவியோரம் கொட்டப்படும் கழிவுகள் ஊருக்குள் வருகின்றன. வெள்ளம் பெருக்கெடுத்து கழிவுகளை வீடுகளிற்குள்ளோ அல்லது வீட்டு வளவுகளிற்குள்ளோ கொண்டு வந்துவிடுகிறது. கிராமத்திற்குள் வெள்ளம் வருவதை தடுக்க தடுப்பு சுவர் அமைக்கப்பட வேண்டுமென்பது பிரதேசவாசிகளின் நீண்டநாள் கோரிக்கை. அதற்கும் பலனில்லை.

வாவியோர குப்பைகள் முதலைகளிற்கு விருந்தளிப்பதன் இன்னொரு விளைவு, முதலைகள் ஊருக்குள் நுழைவது. அந்தப்பகுதியில் மேய்ச்சலிற்கு செல்லும் கோழிகள், நாய்களை முதலைகள் 'லபக்'கி விடுகிறது. முதலைகள் கரையேற ஆரம்பித்த பின்னர் சிறு குழந்தைகளிற்கு ஆபத்து நேரலாமென்ற அச்சம் ஊரில் தொற்றியுள்ளது.

நீர்நிலைகளை கழிவுகளாலோ மண்ணாலோ நிரவுவதையோ, நீர்நிலைகளை அசுத்தமாக்குவதையோ இயற்கை ஒருபோதும் பொறுத்துக் கொள்வதில்லை. தன்னை சுரண்டுபவர்கள் மீது இயற்கை எப்பொழுதும் பழிதீர்த்துக் கொண்டிருக்காது. எப்பொழுதாவதுதான் மூர்க்கங் கொள்ளும். அது மனித வரலாற்றில் கறைபடிந்த பக்கமாக இருக்கும்.



மு.சித்திவேல்
உள்ளூராட்சி ஆணையாளர்

காத்தான்குடி பிரதேசத்தில் அதிக கழிவுகள் கொட்டப்படுகிறது. அது பற்றி மக்களும் தொடர்ந்து முறைப்பாடு செய்து வருகின்றனர். விரைவில் ஏறாவூர்பற்று பிரதேசத்தில் திண்மக் கழிவுகளை சேகரிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


குப்பைகள் கொட்டுவதற்கென காத்தான்குடிநகரசபை பொதுமக்களிடம் நிதி சேகரித்து பூநொச்சிமுனையில் சுமார் 70 இலட்சம் செலவில் 3 ஏக்கர் காணி கொள்வனவு செய்தது. எனினும், அங்கு முறையான கழிவகற்றல் பொறிமுறைகள் செய்யப்படாததால் குப்பை இன்னும் கொட்டப்படாமல் உள்ளது.

காத்தான்குடி நகரசபையினால் தினமும் இந்த பகுதியில் 50 தொன் கழிவுகள் கொட்டப்படுகின்றன. அவற்றில் 65% கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. எஞ்சியவை வாவிக்குள் கொட்டப்படுகின்றன.

குப்பைகள் கொட்டப்படும் பகுதிக்கு அப்பால் எருமைத்தீவு உள்ளது. காத்தான்குடி நகரசபையை தரமுயர்த்தி மாநகரசபையாக்குவதற்காக நிலப்பரப்பை விஸ்தரிக்கும் இரகசிய திட்டம் இந்த குப்பை கொட்டலின் பின்னணியில் உள்ளதென குற்றம்சாட்டுகிறார்கள் நம்முடன் பேசிய ஆரையம்பதி மேற்கு மக்கள் பலர். குப்பைகளை கொட்டி, வாவியை நிரப்பி, பின்னர் அதன்மேல் கிரவலை நிரவி எருமைத்தீவுடன் நிலத் தொடர்பை ஏற்படுத்தி, காத்தான்குடியின் நிலப்பரப்பை விஸ்தரித்து மாநாகரசபையாக்கும் திட்டமுள்ளதென்பது அவர்களின் குற்றச்சாட்டு. அதனால்த்தான் கடற்பக்கமாக உள்ள பூநொச்சிமுனையில் குப்பை கொட்டாமல், வாவிப்பக்கமாக இங்கு குப்பை கொட்டப்படுகிறது என்கிறார்கள்.



மழைக்காலங்களில் வாவியோரம் கொட்டப்படும் கழிவுகள் ஊருக்குள் வருகின்றன. வெள்ளம் பெருக்கெடுத்து கழிவுகளை வீடுகளிற்குள்ளோ அல்லது வீட்டு வளவுகளிற்குள்ளோ கொண்டு வந்துவிடுகிறது.




## ராசா கையை வைச்சால்!

இதுவும் கைதடி இராசதானி சமாச்சாரம்தான். இராசதானியின் பள்ளிக்கூட அமைச்சரின் நடவடிக்கைகள் அவ்வளவு நன்றாக இல்லை. அமைச்சரின் நிர்வாகத்தில் ஏகப்பட்ட குளறுபடி. வாரம் ஒரு பள்ளிக்கூடத்தில் குழப்பம் நடக்கிறது.

அதுதவிர வடக்கில் பல பாடசாலைகளில் நிறைய குழப்பம். இதையெல்லாம் பார்த்த மற்ற உறுப்பினர்கள் ராசாவை சந்தித்து, அமைச்சரை மாற்றுங்கள் என கோரிக்கை வைத்துள்ளனர். போறபோக்கை பார்த்தால் அமைச்சரின் தலை உருளலாம் என்ற நிலை வந்துள்ளது. இந்த இடத்தில்த்தான் அமைச்சர் சாணக்கியத்தை காண்பித்துள்ளார். இப்பொழுது இராசதானிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலையில் அமைச்சர் அந்தர்பல்டியடித்து ராசா எதிர்ப்பு அணியில் முன் வரிசையில் நின்று கூவுகிறாராம். என் தலையை உருட்ட முயன்றால், ராசாவிற்கே செக் வைப்பேன் என்ற சிம்பிள் மெசேஜ்தான் அமைச்சரிடமிருந்து வந்துள்ளது.

ராசா பேரவையின் தீர்வு வெளியீட்டில் கலந்துகொள்ளக்கூடாதென சில உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருந்தார்கள். இந்த 'புரட்சியை' தலைமைதாங்கியவர்களில் அமைச்சரும் ஒருவராம்.

என்ர 'ராசா'... பாருங்களன் கூத்தை!

## பையில காசு, காதில பூ

'மிஸ்டர் கொமிசன்' என்கிறார்கள் வடக்கில் தோட்டம்செய்யும் அமைச்சரை. வடக்கிற்கு வரும் முதலீட்டாளர்கள், தொழில்முனைவோர் அமைச்சரின் நிபந்தனைகளை பார்த்து வெலவெலத்துப் போயுள்ளனராம். பேச்சை ஆரம்பிக்க முன்னரே அமைச்சர் கொமிசன் கேட்கிறாராம். ஏற்கனவே தண்ணீர் சர்ச்சையில் தோட்டக்காரரின் நடவடிக்கைகள் சனங்களிடம் சந்தேகம் ஏற்படுத்தியது. கடைசியாக வெளியான நிபுணர்குழு அறிக்கையிலும் 'நொதேர்ன் பவர் ரொம்ப நல்லவர்கள்' என வில்லங்கமாக கொடுத்த சான்றிதழ் சர்ச்சை அடங்குவதற்குள் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

தென்னிந்தியாவின் மல்லிகை வர்த்தகரொருவரிற்கே இந்த அதிர்ச்சி அனுபவம் நடந்துள்ளது. மல்லிகைப்பூ வியாபாரம் கொடிகட்டி பறக்க ஆரம்பித்துள்ளதையடுத்து, வடக்கில் மல்லிகைச் செய்கையை செய்ய அவர் திட்டமிட்டுள்ளார். வடக்கில் குறைந்த செலவில் மல்லிகை உற்பத்தி செய்யலாமென்பது அவரது திட்டம். இங்கு உற்பத்தி செய்து வெளியிடங்களிற்கு மல்லிகை ஏற்றுமதி செயயலாமென்றும், வடக்கில் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்றும் 'மிஸ்டர் கொமிசனிடம்' விளங்கப்படுத்தியுள்ளார் வர்த்தகர். அமைச்சர் வழக்கம்போல பையில் காசு, காதில் பூ என கூறியுள்ளார்.

இங்கே விற்பனை செய்ய வந்தால்த்தான் கொமிசன் கொடுக்கலாம், உற்பத்திக்கும் கொமிசனா என அவர் தலையை சொறிந்து கொண்டு போய்விட்டாராம்.





கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி கடந்த வாரம் நடந்தது. அதன் சில காட்சிகள்.







# இலங்கையின் தேங்காய்த்தும்புக் கைத்தொழில்



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263




உலகின் சூழலிற்கு நட்பான பொருட்கள் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக தேங்காயின் உரிமட்டையிலிருந்து பெறப்படும் தென்னந்தும்பில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகையான உற்பத்திகளுக்கு பெருமளவிலான கேள்வி உருவாகியுள்ளது. சிறிலங்காவின் தேங்காய்த் தும்பு உற்பத்தியில் காணப்படும் உயர்ந்த இயல்புகள் காரணமாக அக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு நாடுகளில் எமது நாடானது ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

தென்னஞ்சோறுடன் சேர்ந்து உருவான தேங்காய் உரிமட்டையிலிருந்து வெள்ளை, கபிலம் என இரு வகையான தேங்காய்த் தும்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வெள்ளைத்தும்பு கைத்தொழிலானது சிறிலங்காவின் தென்பகுதியிலும் கபிலநிற தும்புக் கைத்தொழிலானது தென்பகுதி மற்றும் தேங்காய் முக்கோண பிரதேசத்திலும் வியாபித்து உள்ளது.

**கபில நிற தேங்காய்த் தும்பு உற்பத்தி.**

உலர்ந்த உரிமட்டையானது நீர்த்தடாகங்களில் இடப்பட்டு 10 நாள் தொடக்கம் 6 மாதம் வரை ஊறவிடப்படும். நன்றாக ஊறிய தேங்காய் உரிமட்டையானது நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு பாரம்பரிய இயந்திரமான அணிகளான ட்ரம்மில் பிடிக்கப்பட்டு வெளியிலுள்ள மட்டைப் பகுதியும் சேற்றுப்பகுதியும் அகற்றப்படும். சுட்டிலும் சில்லைக்கொண்ட ரைஸி எனப்படும் இயந்திரத்தில் இடப்பட்டு மேலே பெறப்பட்ட தும்பில் உள்ள சிறு பகுதிகளும் மிகுதித்தும்பு சோற்றுப் பகுதிகளும் அகற்றப்பட்டு மெத்தைத் தும்பு பெறப்படும். இப்படிப் பெறப்பட்ட மெத்தைத் தும்பானது வெயிலில் காயவிடப்படும்.

இச் செயற்பாட்டிற்கு மேலதிகமாக நவீன தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தும்பகற்றும் இயந்திரம் மூலமாக பச்சை உரிமட்டையிலிருந்து ஊற வைக்கப்படாமல் தும்பு பெறப்படும்.





**இலங்கையின் தென்னந்தும்புக் கைத்தொழில்.**

பாரம்பரிய இயந்திரம் மூலம் உலர்ந்த தேங்காய் உரிமட்டையிலிருந்து அகற்றப்படும் தென்னந்தும்புக்குப் பிறகு கையில் மிஞ்சியுள்ள தும்பானது Bristle தும்பு எனப்படும். Bristle தும்பானது சீவப்பட்டுப் பெறப்படும் நீளத்திற்கு ஏற்ப வகைப் படுத்தப்படும்.

- முதலாவதாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பானது பகுதியாக சீவிய கட்டு ஒன்று உடைய தும்பு எனப்படும்
- இரண்டாவது முறையாக சீவியபின் கையில் மிஞ்சும் தும்பு சீவிய கட்டு ஒன்று உடைய தும்பு எனப்படும்.
- மூன்றாவது முறையாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பானது சீவிய கட்டு இரண்டு உடைய தும்பு எனப்படும்.
- நான்காவது முறையாக சீவிய பின் கையில் மிஞ்சும் தும்பானது கட்டு மூன்று உடைய தும்பு எனப்படும்.
- சீவும் போது அகற்றப்படும் தும்பானது Omat தும்பு எனப்படும்.

சீவிய Bristle தும்பானது சக்திவாய்ந்ததும், விலையுயர்ந்ததும் ஆகும். இவற்றுள் மிக அதிகபெறுமதி உடையது கட்டு மூன்றுடைய தும்பாகும். Bristle தும்பின் மூலம் தலாசித்தூரிகை, பெனிஸ்டர் தூரிகை, தும்புத்தடி போன்றவை உற்பத்தி செய்யப்படும். இவை தூசுக்களை அகற்றி துப்பரவு செய்ய, மலசலகூடங்களை துப்பரவு செய்ய பாவிக்கப்படும். மெத்தை தும்பு, Omat தும்பு மெத்தை தயாரிக்கவும், இறப்பர் சேர்க்கப்பட்ட மெத்தை, வாகனங்களின் ஆசனங்கள் பொதி செய்தல், மண்ணரிப்புப் போன்றவை தடுப்பதற்கும் பாவிக்கப்படும். இத்தும்பு வகையானது ஏற்றுமதி செய்வதற்காக கயிறு போன்று திரிக்கப்படும். Bristle stroke மெத்தை தும்பு சம்பந்தமாக பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வர்ணம்:மென்கபிலம் மதல் பொன்னிற கபிலம் வரை

ஈரப்பதம்:18% குறைவாக

தூசு/கழிவுப் பொருட்களின் அளவு:5.5 ற்கு குறைவாக

Bristle (twisted fibre) தும்பானது ஏற்றுமதிக்காக கயிறு போன்ற முறையிலும் பேல் முறையில், Ballet



முறையில் பொதி செய்யப்படும். மெத்தை தும்பானது பேல் (Bale) முறையில் அல்லது திரிக்கப்பட்ட கயிறாக ஏற்றுமதி செய்யப்படும். சிறிலங்காவில் இருந்து Bristle தும்பானது ஜேர்மனி,ஜப்பான், பெல்ஜியம், ப்ரான்ஸ், பாகிஸ்தான், சீனா, நெதர்லாந்து, ஜேர்மனி, யப்பான் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

Bristle தும்பானது 50kg இன் விலை 1250.00 ரூபாய் வரையிலும் மெத்தை தும்பானது 50kg விலை 650.00 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. Bristle தும்பின் ஏற்றுமதி விலை கிட்டத்தட்ட மெட்ரிக்தொன்னிற்கு 500 அமெரிக்கடொலர்களாகும். 20 அடி, 40 அடி கொள்கலன்களில் முறையே 8,17 மெட்ரிக்தொன்கள் Bristle தும்பும் 12,24 மெட்ரிக்தொன்கள் மெத்தைத் தும்பும் பொதி செய்யப் படலாம். மேலும் தென்னந்தும்பில் உற்பத்தியாகும் பொருட்களில் தென்னங்கயிறு twine கயிறு போன்றவை கருத்திற் கொள்ளப் படலாம். இவற்றுக் கிடையிலான வேறுபாடானது twine கயிற்றின் மத்தியில் சக்தியை அதிகரிப்பதற் கான twine நூல் ஒன்று சேர்க்கப் பட்டிருக்கும். இவை உற்பத்தி செய்யப்படும் சிறு கைத்தொழில் நிலையங்கள் எமது சாட்டில் காணப் படும் அதே பட்சத்தில் சீவிய கட்டு ஒன்று உடைய அல்லது omat தும்பானது இவை தயாரிப்பதற் காக மூலப்பொருளாக பயன் படுத்தப்படுகின்றது.

தென்னங்கயிறின் ஏற்றுமதி விலையானது மெட்ரிக்டன்னிற்கு 550 அமெரிக்க டொலராகவும் twine இன் ஏற்றுமதி விலையானது மெட்ரிக்தொன் ஒன்றிற்கு 800,1200 அமெரிக்க டொலராகவும் காணப் படுகின்றது.

வெள்ளை நிற தேங்காய்த்தும்பு உற்பத்தி பச்சை நிறமுள்ள முதிர்ந்த உரிமட்டையைதூயநீரில்ஊறவிட்டு தேங்காய்த்தும்பை அகற்றுவதன் மூலம் பெறப்படுகின்றது.

வெள்ளை தும்பானது கால் துடைப்பான், சுவரலங்காரம், கயிற் றுப்பாய் போன்றவை தயாரிப்பதற் காக பயன்படுத்தப்படடம். இலங்கை யின் தென்பகுதியில் கடலோர பிரதேசங்களில் உரிமட்டை யானது கையினால் தடியின் மூலம் நசுக்கப்பட்டு பெறப்படும். இயற்கையான வெள்ளைத்தேங் காய்த் தும்பு ஏற்றுமதிக்காகவும் கால் துடைப்பான் கயிறு தயாரித்தல் போன்றவற்றிற்காகவும் பாவிக்கப் படும்.



இலங்கையிலிருந்து கயிறானது பாகிஸ்தான், ஜக்கிய இராச்சியம், கொரியா, போன்றவற்றிற்கும் twine கயிறானது ஜப்பான், கொரியா, பாகிஸ்தான், ஜேர்மனி, ஜக்கிய இராச்சியம், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றது.

20,40 அடி கொள்கலன்களில் தென்னங்கயிறானது 7,16 மெட்ரிக் தொன்களும் twine கயிறானது 13,24 மெட்ரிக் தொன்களும் பொதி செய்யப்படும்.

தென்னங்கயிறானது கயிற்றுப் பாய், கயிற்றுச்சாக்கு, கால் துடைப் பான், விவசாயம் சம்பந்தமாக மண்ணரிப்பை தடை செய்தல் போன்றவற்றிற்கும் twine கயிறானது கடல் நத்தை, வளர்ப்பு, கயிற்றுப் பாய் உற்பத்தி, புவிபுடவை தயாரிப்பு, போன்றவற்றிற்கும் பயன் படுத்தப்படும்.

கடந்தகாலங்களில் மலைகள் போன்ற குவிக்கப்பட்டு காணப் பட்ட தென்னஞ்சோறானது தற்போது வெவ்வேறு விகிதாசாரங் களில் அமுக்கம் செலுத்தப்பட்டு பொதி செய்யப்பட்டு செங்கல் வடிவிலும் வேறு வடிவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. வட மாகாணத்தினைப் பொறுத்த வரையில் கரையோரப் பிரதேசங் களில் உதாரணமாக பளை, கச்சாய், கிராஞ்சி போன்ற இடங்களில் கூடுதலாக தும்புக் கைத்தொழில் செய்கின்றனர்.

**தேங்காய்த்தும்புக் கைத்தொழில்.**

சாதாரணமாக நன்கு முற்றிய தேங்காயிலிருந்து 680 கிராம் தும்பு கிடைக்கும். 1000 உரிமட்டைகளில் சராசரி 8082kg தும்பு கிடைக்கும்.

கயிறு திரித்தல்: மாதக்கணக்கில் நீர் நிலைகளில் ஊறவிடப்பட்ட பொச்சுமட்டைகளை வெளியே எடுத்து நல்ல நீர் விட்டு அலசப்படும். பிறகு மரத்தின் மீது வைத்து மரச்சுத்தியலால் அடித்து உதறும் போது தும்புச்சோற்றிகள் வேறாகப் பிரிந்து தும்புகள் எஞ்சுகின்றன. கைகளால் பிரித்தெடுக்கப்படும் தும்புகள் உலர்த்தப்பட்ட பின் பொருத்தமான இயந்திரங்களில் கொடுத்து மேலும் தரம் பிரிக்கப் படுகின்றன. தும்புத் தொழிலில் நவீன முன்னேற்ற முறையாக ஈரமாக்கப்பட்ட பொச்சுமட்டை யினை நேரடியாக தும்பு வேறாக்கும் இயந்திரத்தில் இட்டுத் தும்பினை வேறாக்கலாம்.









# உலகெங்கும் செல்லும் யாழ்ப்பாணக் "குட்டான்"

சுட்டு
chuddu.deepam@gmail.com

யாழ்ப்பாணம் என்றவுடன் நினைவிற்கு வருவது பனை மரங்கள் தான். யாழின் பிரதான வளமான பனையை நாம் பல இலட்சிணைகளில் கூட கண்ட துண்டு. ஏன்... வடக்கு மாகாண சபையின் இலட்சினையில் கூட பனை மரம் தானே உள்ளது. அந்தளவிற்கு தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது இந்தப் பனை.

பனை மரத்தின், ஓலை, குருத்து, மட்டை, காய், பழம், என நுனி முதல் அடி வரை அனைத்துப் பகுதிகளுமே நமக்கு பயன்களை அள்ளித் தருவதால் அதனை "கற்பகதரு" என்பர். இருந்தாலும் நம்மூரில் உற்பத்தியாகி உலகெங்கும் ஏற்றுமதி செய்யப்படும் "பனங்குட்டான்"க்கு மவுசு அதிகம்.

போர்ச்சூழல் நிலவிய காலப் பகுதியில் யாழ்ப்பாணத்திலும் சரி, வன்னியிலும் சரி தேனீருக்குக்கூட சீனியில்லாத நிலைமைகள் பலதடவை வந்தன. அந்நேரத்தில் பனங்குட்டான் தான் கைகொடுத்ததை நிச்சயம் யாராலும் மறக்க முடியாது. இப்போதும் கூட பனங்கட்டியுடன் தேநீர் குடிச்சாத்தான் பலருக்கு திருப்தியாக இருக்குமாம். ஆனால், பனங்கட்டி எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது, அதில் என்னென்ன மூலப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன என்பது பற்றி பலரும் முழுமையாக அறிந்திருக்க வாய்ப்பில்லை.

## இது ஒன்றும் சுலபமில்லை!

பனங்கட்டி காய்ச்சுவது ஒன்றும் சுலபமானதில்லை. இதற்கு மிகுந்த கைப்பக்குவம் தேவை. பதம் சற்றுப் பிசகினால்கூட போதும் விற்கமுடியாதபடி வந்து விடும். காய்ச்சும் வெப்பநிலை அளவுகள், நேர அளவுகள், கலவை அளவுகள் என்பன அதனை தயாரிப்பவர்களின் பட்டறிவுகள் தானேயன்றி தரவு வடிவில் எவையுமில்லை.

சரியான வெப்பத்தில் காய்ச்ச வேண்டும். எல்லாவற்றிலும் உச்சக் கட்டம் இறக்கும் பதம்தான். கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் குட்டானில் ஊற்ற முடியாது. அதன் சுவையும் மாறிவிடுமாம்.

## குட்டான்!

பனை ஓலையால் இளைக்கப்படும் ஓர் சிறிய உருளைதான் குட்டான். இந்தக் குட்டானில் பனங்கட்டி உள்ளதால் இது ஆரம்பத்தில் "பனங்கட்டிக்குட்டான" என்று அழைக்கப்பட்டு தற்போது "பனங்குட்டான்" என்றழைக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் செல்லமாக "குட்டான்" என்று அழைக்கப்படுகின்றது.



## எவ்வாறு தாயரிக்கப்படுகிறது?

முதற் கட்டமாக பனையிலிருந்து பதநீர் பெறப்படுகிறது. பங்குனி மாதத்தில் பாகுத் திணிவைக் கொண்ட பதநீரை பனை மரங்கள் அதிகம் சுரப்பதால், இந்தக் காலப்பகுதியில் சேகரிக்கப்படும் பதநீர்தான் பனங்கட்டிக்கு உகந்த தன்மையைக் கொண்டதாம். பதநீர் கொதித்துக் கொள்ளாமல் இருப்பதற்காக மண் முட்டிகளில் சுண்ணாம்பு தடவிப் பதநீர் பெறப்படுகின்றது. இவ்வாறு சேகரிக்கப்படும் பதநீர் மொத்தமாக பனங்கட்டி உற்பத்திச்சாலையினரால் கொள்வனவு செய்யப்பட்டு தொட்டியில் இடப்பட்டு குறிப்பிட்டளவு வெப்பநிலையில் காய்ச்சப்படுகின்றது. பதநீர் பாணித் தன்மையானதும் அவை ஓலை அடக்கிகளில் (குட்டானில்) ஊற்றி வைக்கப்படுகின்றது. இரண்டு மூன்று நாட்களில் இறுகி கடினத்தன்மை அடைந்து விடும்.

வெப்பநிலை சற்று ஏறும்போது மருத்துவ தேவைகளுக்கு பயன்படும் "கல்லாகாரம்" பெறப்படுவதுடன், வெப்பநிலை நன்கு உயரும்போது "பனஞ்சீனி" பெறப்படுகின்றது. உரிய சந்;தை வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் பெரும்பாலும் பனஞ்சீனி உற்பத்தி செய்யப்படுவதில்லை எனவும், அனைத்துத் தொழிற்சாலைகளும் பனங்கட்டிக் குட்டானை முதன்மைப்படுத்தியே இயங்குவதாகவும் பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் வரதராசா தெரிவித்தார்.



## பதனீர் லீற்றர் 60ரூபா!

பதநீர் சேகரிப்பவர்களுக்கு லீற்றர் ஒன்றுக்கு அண்ணளவாக 60 ரூபாய் வழங்கப்படுவதாகவும், காலங்களுக்கேற்ப இத்தொகை மாறுபடும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பதநீர் சேகரிப்பாளர்களின் தொழில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் பட்சத்தில், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் அவர்களுக்கான நிவாராணம் வழங்கப்படுவதாகவும், அண்மையில் நாட்டில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பதநீர் சேகரிப்பாளர்களுக்கு தலா 3,100 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மீட்கப்பட்டதாகவும் வரதராசா குறிப்பிட்டார்.

## வெற்றிப் பாதையில் பனங்கட்டித் தொழிற்சாலைகள்...

யாழ்ப்பாணத்தில் 19 பனங்கட்டித் தொழிற்சாலைகள் வெற்றிகரமாக இயங்கி வருவதாகவும், இவற்றில் பண்டத்தரிப்பு பனங்கட்டித் தொழிற்சாலையே அதிகமாக பனங்கட்டிகளை உற்பத்திசெய்து முன்னிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், அச்சுவேலி பனங்கட்டி உற்பத்தி நிலையத்திற்கு 25 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## உலகெங்கும் ஏற்றுமதி!

உள்ளூரில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் "பனங்குட்டான்"க்கு பெரும் வரவேற்பு கிடைப்பதால், இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் "பனங்குட்டான்" உற்பத்தியை கூட்டுவதுடன், பலருக்கு தொழில்வாய்ப்பும் பெற்றுத்தர முடியும் என பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் வரதராசா.

நம்மூரில் உற்பத்தியாகும் பொருளுக்கு உலகெங்கும் கேள்வி இருப்பது நமக்கெல்லாம் பெருமை தான். பனங்குட்டான் உற்பத்தியை நாம் ஊக்குவித்தால் மேலும் பல தொழிற்சாலைகள் இங்கு உருவாகுவதுடன், பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## பனங்கட்டியின் சில மருத்துவ குணங்கள்...

பதநீரை காய்ச்சி அதிலிருந்து பெறப்படும் பனங் கட்டிக்கு சுவை, மணம் இருப்பதோடு மட்டுமல்லாமல், மருத்துவ குணமும் அதிகம் இருக்கிறது. இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் பனங்கட்டி நமது உடலை சுத்தப்படுத்தி செரிமானத்திற்கு பணிபுரிகிறது. பருவம் அடைந்தபெண்களுக்கு பனங்கட்டியும், உளுந்தும் சேர்த்து உளுந்தங்களி செய்து கொடுத்தால் இடுப்பு எலும்புகள் வலுப்பெருவதுடன், கருப்பையும் ஆரோக்கியமாக இருக்கும். மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிறுவலியை போக்க பனங்கட்டி சாப்பிடலாம். சீரகத்தை வறுத்து சுக்கு மற்றும் பனங்கட்டி சேர்த்து சாப்பிட்டால், நன்கு பசி எடுக்கும். ஓமத்தை பனங்கட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாயுத் தொல்லை நீங்கும்.

குப்பைமேனிக் கீரையுடன் பனங்கட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள் பட்ட சளித் தொல்லை நீங்கும். தேனீருக்கு சீனிக்கு பதிலாக பனங்கட்டி சேர்த்துக் குடித்தால் உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும். சர்க்கரை நோயாளிகளும் இது சிறந்தது. இதில் சுண்ணாம்புச் சத்தும், நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகமாக இருக்கிறது. சர்க்கரை நோயாளிகள், கைக்குத்தல் அரிசி சாதத்துடன் பனங்கட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால். சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும்.






ஏறாவூர்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு கிராமத்தில் 'ஆரோக்கிய பாதை' என்ற பெயரில் மது அருந்துபவர்களிற்கான புனர்வாழ்வு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மதுப்பாவனையால் உடல், உள ரீதியான பாதிப்புக்களை சந்தித்தவர்கள் அதிலிருந்து விடுபட வைத்தியவாலை உதவுகிறது. தற்போது வைத்தியசாலையில் 12 ஆண்களும், 8 பெண்களும் தங்கியிருந்து சிகிச்சையளித்து வருகின்றனர்.




# போட்டியோ போட்டி

மாயாமகேஸ்
mayamahes90@gmail.com

கடிகாரத்தினுள் இருக்கும் பெரிய முள்ளானது விரைந்து சுற்றி வந்து சிறிய முள்ளைச் முந்திச் செல்கிறது. மீண்டும் மீண்டும் இது தொடர்கிறது. கடிகாரத்தில் மட்டுமல்ல, மனித வாழ்விலும் இதுதான் நடக்கிறது. எல்லா மனிதர்களும் வாழ்வில் வெற்றிபெற்றவர்கள் கிடையாது. நல்லவன் உள்ள உலகத்தில்தான் கெட்டவனும் உள்ளான். உலகையே வாங்கும் வல்லமையுள்ள பணக்காரன் வீட்டிற்கருகில் ஒருவேளை உணவிற்கு வழியற்றவன் வசிக்கிறான். இதன் அர்த்தம் ஏதோ ஒருவிதத்தில் ஒருவன் இன்னொருவனை விட முந்திமுந்தி ஓடிகடகொண்டிருக்கிறான் என்பதே.

தற்காலத்தில் பார்க்கும் போது எங்கும் எதிலும் போட்டியே தென்படுகின்றது. இலகுவாக கிடைப்பதைக்கூட தேவைக்கு அதிகமாக பெறுவதற்கு போட்டி. ஒரு பொருளைத் தெரிவு செய்வதில் தொடங்கி பாரிய வணிக விற்பனைவரை போட்டிதான். சிறிய குழந்தைக்கு நீ சாப்பிடவில்லை என்றால் அண்ணா சாப்பிட்டு விடுவான் என்று உணவூட்டும் போதே போட்டி ஆரம்பமாகிவிடுகிறது. இதைவிடுத்து உணவில் உள்ள ஊட்டச்சத்தைச் சொல்லி உணவூட்டுபவர்கள் எத்தனை பேர்?

இது மரண ஊர்வலத்திலும்கூட தகுதியைக்காட்டும் போட்டியாக தொடர்கிறது. தற்காலத்து கல்வி முறைகூட எதிர்கால போட்டி உலகிற்கு ஏற்றவாறே மாணவர்களைத் தயார்செய்கிறது. இது அவசியமானதுதான். தொழிற் கல்விகள் தொழிலில் முன்னிலை வகிப்பதற்கும், போட்டி போட்டு முன்னேறுவதற்கும் கற்றுத்தருகின்றன. மாறாக பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை குறைவடைந்து செல்கிறது. இங்கு போட்டிப் பரீட்சைகளை எடுத்துக் கொள்வோமேயானால் போட்டியின் அடிப்படையில் முன்னணி வகிப்பவரே தெரிவுசெய்யப்படுகிறார். தரம் 5 மாணவர்கள் போட்டிப் பரீட்சையில் முந்துவதற்காக குழந்தைப் பருவத்தை மறந்து அதிகமான பாரத்தை சுமக்கின்றனர். குழந்தைகளைவிட பிரதான போட்டியாளர்கள் பெற்றோர்களே. நிர்வாக பரீட்சையில் தெரிவு செய்யப்படும் எத்தனை பேர் சேவையை நோக்காக கொண்டு செல்கின்றனா.;


பெரும்பாலானோர் பிறரை முந்தி முன்னிலை வகிக்கவும், உயர்ந்த நிலையும் தகுதியும் பெறவுமே விரும்புகின்றனர். அனுபவத்தைக் கூட அவசர அவசரமாக பெறுகின்றனர்.

"கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்பது வள்ளுவன் கூற்று.

கற்ற கல்விக்கு ஏற்ப நடப்பது இருக்கட்டும், கற்ற கல்வி எத்தனை பேருக்கு நினைவில் நிற்கிறது. பரிட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதற்காக கற்கும் கல்வி பரீட்சை முடிந்தவுடன் மறந்து போய்விடுகிறது. பிறருக்கு அளிப்பதற்காகவே கல்வி பிறரை அழிப்பதற்காகவல்ல என்பதை நாம் உணரவேண்டும். நாம் முன்னேறவேண்டும் என்று நினைப்பவர்களே அதிகம். நாம் இந்த நாட்டையோ அன்றி சமூகத்தையோ முன்னேற்ற வேண்டும் என்று நினைப்பவர்கள் அரிது. கற்பித்தல் செயற்பாடுகள் பிற கல்விகளோடு மனிதநேயமும், பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் மாணவர்களிற்குப்புகுத்தும்வகையில் அமைய வேண்டும். இவையே எதிர்காலத்தில் ஆரோக்கியமான நேயமுள்ள சமூகத்திற்கு அடிக்கல்லாக விளங்கும்.

முன்னால் இருப்பவனை முந்த வேண்டும்என்றால் பந்தயக்குதிரை போல மனிதன் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கவேண்டும். எப்போதும் ஒருவரைவிட முன்னணியில் ஒருவரோ பலரோ இருப்பர். முதலாவதாக இருப்பவர்கூட தன்நிலையைத் தக்கவைக்க முன்பைவிட அதிகமாகவே ஓட வேண்டும். ஓடி ஓடி மனிதன் வாழ்க்கையின் எல்லைவரைதான் ஓட முடியும். வாழ்வின் எல்லையில் எதுவும் நிரந்தரமில்லை என்று சொல்ல மரணம் காத்திருக்கிறது. இதை உணர்ந்து பிறரைத் துரத்துவதை விடுத்து எப்போது பிறரைத் தூக்கிவிடப்போகிறான் மனிதன்?

போட்டி அவசியந்தான் இல்லாவிடில் முன்னேற்றம் இருக்காது. ஆனால் ஆரோக்கியமான போட்டியாக இருக்க வேண்டும். பொறாமையின் வெளிப்பாடாக இருக்கக் கூடாது. ஒருவரை புறந்தள்ளி முன்னேறுவது போட்டியல்ல. ஒருவரை முன்னேற்றுவதன்மூலம் முன்னேறுவதே சிறந்தது. முறையற்ற போட்டிகளின் முடிவு விபரீதமே ஆகும்.







ஆதிப் புகையிரதத்திற்கு வயது 200 கடந்து விட்டது. இப்பொழுது மின்சார புகையிரதங்கள் எல்லாம் வந்துவிட்டன. ஆனால் பழசை மறக்கலாமா? முடியாதென கூறிய இலங்கை புகையிரததிணைக்களம் செய்த காரியமொன்றுதான் இப்பொழுது பரபரப்பாக பேசப்படுகிறது. நீராவி புகையிரதமொன்றை கடந்தவாரம் கொழும்பிலிருந்து பதுளைவரை ஓட விட்டனர். பிறகென்ன உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதில் ஏறி உல்லாசப்பயணம் சென்றனர்.




68வது சுதந்திரதின நிகழ்வுகளில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அட்டன், கினிகத்தேனையிலுள்ள மலசலகூடமொன்றிற்கு மேல் ஏறி எதிர்ப்பு போராட்டம் நடத்தியுள்ளார் மகிந்த ஆதரவு உள்ளூர் அரசியல்வாதியான எலபிரிய நந்தராஜ் என்பவர்.



# டூரிங் டாக்கீஸ்



## ஐயிட்டம் அம்மணி

இன்றைய திகதியில் மொத்த தென்னிந்திய திரையுலகிலும் 'அன்லிமிட்டட் கவர்ச்சி வெடிகுண்டு' லீனா கபூர்தான். தமிழ், தெலுங்கு திரையுலகம் இந்த 21 வயது பெண்ணின் காலடியில் தவமாய்தவமிருக்கிறது. நமது படத்திலும் ஒரு குத்துப் போட்டுவிட்டு போங்கள் என்பதுதான் கோரிக்கை. இந்தியில் அவர் காட்டிய எல்லையில்லாத கவர்ச்சிதான் இத்தனைக்கும் காரணம். லீனாவின் ஒரேயொரு ஐட்டம்சோங் வைத்தாலே படம் பிய்த்துக் கொண்டு போகுமென தயாரிப்பாளர்கள் நம்புகிறார்களாம்.



## வெயிற் பண்ணும் வேதிகா

நல்ல நடிகை, பார்க்கவும் நன்றாக இருக்கிறார் என பெயரெடுத்த வேதிகாவை நீண்டநாட்களாக திரையிலேயே காணவில்லை. காவியத்தலைவனிற்கு பின்னர் ஆளின் அட்ரசே இல்லை. தேடிப்பிடித்து 'எங்கே போனீர்கள்' எனக்கேட்டால் அம்மணி அதிர்ச்சிப்பதில் சொல்கிறார். நாலு வயதிலிருந்தே நடிகை இலட்சியத்துடன் வளர்ந்தவள், இங்கேதான் இருக்கிறேன் என்கிறார். பி.வாசு இயக்கத்தில் நடிக்கிறாராம். நல்லகதையுள்ள படங்களிற்காக காத்திருக்கிறேன் என்றார்.

## கதகளி கத்ரின்

கதகளி ரிலீசுக்காக காத்திருக்கிறார் கத்ரின் தெரசா. விசால் ஜோடியாக நடித்துள்ள இந்தப்படம் திரைக்கு வந்ததன் பின்னர் தன்னை தமிழ் தயாரிப்பாளர்கள் துரத்திக் கொண்டு வருவார்கள் என நம்புகிறார். கதைக்கு தேவையெனில் கவர்ச்சியில் அட்ஜஸ்ட் செய்துகொள்ளவும் தயாரென பச்சைக்கொடியும் காட்டியுள்ளார். 'நான் அமைதியான பெண். ஆனால் சினிமாவில் சில விடயங்கள் கண்டிப்பாக தேவை. இதனால் கவர்ச்சியாக நடிக்கவும் தயாராக இருக்கிறேன்' என்றார்.



## வந்துட்டார்யா வடிவேலு

அரசியல் அது இது என அதகளம் பண்ணிய வடிவேலு சினிமாவை கைவிட்டார். இந்தாளை எங்கேயோ பார்த்த மாதிரியிருக்கிறதேயென ரசிகர்கள் கேட்கத் தொடங்க 'தெனாலிராமன்' படத்துடன் களமிறங்கினார். சுமாராக போனது. பின்னர் எலி. முழுதாக ஊற்றிக் கொண்டது. பதறிப்போன வடிவேலு படங்களில் ஒப்பந்தமாகாமல் இருந்துவிட்டார். மாஸ் என்ரி ஒன்றுதான் வைகைப்புயலின் இப்போதைய இலட்சியம். இதற்காக தீவிர கதைவிவாதத்தில் ஈடுபட்டு வருகிறார். 'சூதுகவ்வும்' நலன் குமாரசாமியிடம் கதைகேட்கிறாராம். அவரது படத்தில்த்தான் நடிப்பார் என்கிறார்கள்.



## அதற்கு மட்டும் ஆண் தேவை

திருமணம் செய்து கொள்வேன். குழந்தை பெற்றுக்கொள்ளும் ஒரு காரணத்திற்காகத்தான் அதை செய்யவுள்ளேன்' என கூறி பரபரப்பை கிளப்பியுள்ளார் பிரியங்கா சோப்ரா. அவரது கருத்துத்தான் இப்பொழுது இந்திய சமூக ஊடகங்களில் ஹொட் ரொபிக். 'வைரங்கள், பணத்திற்காக யாரையும் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. குழந்தை பெற்றுக்கொள்ளும் காரணத்தை தவிர வேறெந்த காரணத்திற்காகவும் என் வாழ்வில் ஆண் தேவையில்லை. காதலித்துத்தான் திருமணம் செய்வேன்' என கூறியுள்ளார்.



## ஐ லவ் யூ த்ரிஷா

இப்போதைக்கு திருமணம் செய்யும் எண்ணமில்லையென கூறியுள்ளார் த்ரிஷா. அவரது ருவிற்றர் பக்கத்தில் ரசிக கண்மணியொன்றின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே இதனை தெரிவித்துள்ளார். வருண் மணியனுடனான உறவு நிச்சயதார்த்தம் வரை சென்று முறிந்த பின்னர் 'அரண்மனை 2' படத்தில் நடிக்கிறார். படம் வெளியாவதையொட்டி ருவிற்றர் பக்கத்தில் ரசிகர்களின் கேள்விகளிற்கு பதிலளித்தார். இதன்போது ரசிக கண்மணியொன்று 'உங்களை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்' என ஐ லவ் யூ சொல்லியிருக்கிறார். அதற்குத்தான் த்ரிஷா இப்படி பதிலளித்திருக்கிறார்.



## டாப் ஆவாரா டாப்ஸி?

இருந்து இருந்து பார்த்தார் டாப்ஸி. சினிமாவில் ஒன்றும் சொல்லிக்கொள்ளும் விதமாக அமையவில்லை. கிடைப்பது ஓரிரண்டு நாயகி வேடம் அல்லது துண்டு துக்கடா வேடம். நானும் அழகிதானே என்று பகிரங்கமாக அழுதும் பார்த்தார். ம்கூம். பலனில்லை. இப்பொழுது இந்தி வாய்ப்பொன்று வந்துள்ளது. ராணா ஜோடியாக 'காஸி' என்ற படம். இதில் உடல்எடையை குறைத்து ஒல்லிப்பிச்சானாக தோன்றுகிறார் டாப்ஸி. அடுத்த ஒரு மாதத்திற்கு எவ்வளவு குறைவாக சாப்பிடலாமோ அவ்வளவு குறைவாக சாப்பிடப் போவதாக கூறியிருக்கிறார்.

## பந்தா இல்லாத பார்வதி

தமிழில் நடித்த அத்தனை படங்களிலும் கைதட்டல் வாங்கியவர் பார்வதி மேனன். மரியான், பூ படங்களின் காட்சிகள் இன்றும் ரசிகர்களின் மனதில் உள்ளது. என்னதான் திறமையிருந்தும் தமிழில் முன்னணி நடிகையாக முடியவில்லையே என பார்வதியிடம் பேசினால் பலவிடயங்களை மனம் திறந்து பேசினார். 'முன்னணி நாயகன், பெரிய பட்ஜெட் என்றெல்லாம் பார்த்து நான் படங்களை ஒப்புக் கெள்வதில்லை. நல்ல கதையிருந்தால் போதும். சிறிய வேடமென்றாலும் நடிப்பேன்' என்றுள்ளார்.








# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பி.சியா
siya@deepam.lk

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார்களால் உருவாக்கப்பட்ட பெயர்சொல்லும் பாடசாலைகளில் ஒன்றாக இன்றும் விளங்குவது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. 162 வருடங்களிற்கு மேற்பட்ட வரலாற்றை கொண்ட பாடசாலையிது. கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு சுற்றயல் கிராமங்களில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தப் பாடசாலையையே நாடுகிறார்கள். அதுதவிர தெல்லிப்பளை போன்ற தூர இடங்களை சேர்ந்த மாணவர்களும் இங்கு வருகிறார்கள்.

கிறிஸ்தவ பாரம்பரியத்தில் உருவான பாடசாலையாக இருந்தாலும், எல்லா மதங்களிற்கும் சமத்துவமளிக்கும் பாடசாலையாக விளங்குகிறது. பாடசாலை வாயிலின் முன் பகுதியில் பழமையான பிரமாண்ட தேவாலயம் உள்ளது. பாடசாலை வளாகத்திற்குள் இந்துக்களின் முதல் வணக்கத்திற்குரிய பிள்ளையார்கோவிலும் உள்ளது.

இந்தப்பாடசாலையின் அடிப்படையான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளது. விஸ்தீரணமான மைதானம், கிரிக்கெட், உதை பந்து, கூடைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என பெருமளவு வசதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

அதுதவிர, கல்வியிலும் நீண்ட காலமாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகிறது. பல்வேறு காரணங்களினால் சிறுவர் இல்லங்களில் வசிக்கும் பல மாணவர்களும் இங்கு கல்வி கற்கிறார்கள். இவர்கள் அனைவரும் கல்வியில் சிறப்பான இடங்களை சென்றடைவதே கல்லூரியின் சிறப்பு.

கடந்த இரண்டு வருடங்களில் இந்தப்பாடசாலையிலிருந்து 9 மாணவர்கள் பல்கலைகழகத்திற்கும், 12 மாணவர்கள் கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவாகியுள்ளனர். அதுபோல கடந்த வருட க.பொ.த சாதாரணதர பரீட்சையில் பல மாணவர்கள் 9A பெறுபேறு பெற்றுள்ளனர்.

எனினும் புதிதாக பாடத்திட்டத்திற்குள் இணைக்கப்பட்ட தொழில்நுட்பம், மீடியா போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாதது இங்கு பெரிய குறைபாடாக உள்ளது.

மாணவன் இ.இசைவாணன் தேசியமட்டத்தில் குண்டெறிதல், தட்டெறிதல் போட்டிகளில் நான்காமிடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

### சுவடு கூறும் வரலாறு

இந்தப்பாடசாலை 1852ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இரண்டு பாடசாலைகளாக இருந்து பின்னர்கிறிஸ்தவ கல்லூரியாக ஒன்றிணைக்கப்பட்டது. செல்வி. வயவேற் ஹட்சின்ஸ் தலைமையில் இயங்கிய பெண்கள் விடுதிப் பாடசாலையும், ஜீ.எஸ் செல்லையா அவர்களை தலைமை ஆசிரியராக கொண்ட ஆண்கள் பாடசாலையுமே 1945ம் ஆண்டு கிறிஸ்தவ கல்லூரி கலவன் பாடசாலையாகியது.

ஆரம்பத்திலிருந்து கடமையை பொறுப்பேற்ற ஒவ்வொரு அதிபர்களுமே பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை காட்டியுள்ளனர். இராசசேரம் அதிபராக கடமையாற்றியபோது விளையாட்டு போட்டி ஆரம்பமானது. நடரட்ணராஜாவின் காலத்தில் ஆசிரியர்களுக்கான ஓய்வுஅறை அமைக்கப்பட்டது. இவை சில வரலாற்று உதாரணங்கள்.

யுத்த நெருக்குவாரங்களில் சிக்கி இந்தப்பாடசாலையும் பெரும் சிரமங்களை சந்தித்தது. என்றாலும், வெட்ட வெட்ட துளிர்க்கும் மரம் போல் தளைத்து சாதித்து நிற்கிறது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



எஸ்.வேலழகன்
அதிபர்

இங்கு தற்பொழுது 545 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 48 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். யுத்தகால இடப்பெயர்வு மற்றும் பாதுகாப்பு பிரச்சினை என்பன மாணவர்கள் எண்ணிகையை குறைத்துவிட்டது. சில வளங்களும் இல்லாமல் போய்விட்டது. இருந்தாலும் தற்பொழுது கல்வி அமைச்சினாலும் பழைய மாணவர்களாலும் வளங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன.

முன்னரெல்லாம் 1500 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்ற இக் கல்லூரியில் இப்பொழுது 545 பேர்எனபது கவலைக்குரிய விடயம். இதை பெற்றோர்கள் கருத்தில் கொண்டு வளம் நிறைந்த இக்கல்லூரியில் உங்கள் பிள்ளைகளை படிக்க விட வேண்டும் என்பதும் எனது வேண்டுகோள்.

நாம் எதிர்நோக்கும் பிரச்சினை மாணவர்களின் வரவின்மைதான். இதற்காக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுகிறோம். லண்டன் பழய மாணவர்கள் சங்கம் கா.பொ.த சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க நிதி உதவியை செய்கிறார்கள். விளையாட்டு துறை மற்றும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தவும் உதவி புரிகின்றார்கள்.

எமக்கு கட்டிடம், விசேட பாடங்களான அழகியல்பாட பொருட்கள், விவசாய ஆய்வு கூடம் மற்றும் விளையாட்டு பொருட்கள் தேவையாகவுள்ளது. மீண்டும் தரம் வாய்ந்த முன்னணி பாடசாலையாக உருவாகலாமென்பது என்பது என்னுடைய நம்பிக்கை.









யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி அ.த.க பாடசாலையினன் இல்ல மெய்வல்லுனர் போட்டியில் வீதி ஓட்டப் போட்டியும் நடந்தது. அதன் சில காட்சிகள்.

# வைத்தியரிடம் கேளுங்கள்



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687

**கிரந்தி நோய்**
**எம்.புஸ்பராணி, (40)**
**வரணி.**

**கேள்வி:** எனக்கு காலில் தோல் உலர்ந்து காய்ந்தது போல் ஏற்படுகிறது. பின் சிறிய கொப்புளங்களாக வந்து கடிக்கிறது. சொறிந்தால் சில வேளைகளில் இரத்தம் வருகிறது. அனேகமாக ஈரமாகவும், நீர் வடிந்த படியும், காணப்படுகிறது. இது பல தடவைகள் குறிப்பாக பனிக் காலங்களில் வருகிறது. என்ன மருந்துகள் பாவிக்கவேண்டும்?

**பதில்:** உங்களுக்கேற்பட்டிருப்பது ஒவ்வாமையால் வருகின்ற தோல் அழற்ச்சியாகும். கிரந்தி வகையை சேர்ந்தது. இதை ஆங்கிலத்தில் எக்சிமா என அழைப்பார்கள். புறச்சுழ்நிலைகள், அல்லது உணவுகள் ஒவ்வாமையை எற்படுத்துவதால் இது வருகின்றது. ஒவ்வாமைக்கான காரணிகளைக் கண்டு நீக்குவதே சிறந்த சிகிச்சையாகும். இறால், கணவாய், கத்தரிக்காய் போன்ற கிரந்தி உணவுகளை தவிருங்கள். விஸபகர்ப்ப தைலம், கரப்பான் தைலம் போன்றவற்றை வெளிப்பூச்சாக பயன்படுத்தலாம். கைசோர் குக்குழு, பறங்கி கிழங்கு சூரணம் போன்ற மருந்துகளை வைத்தியரின் ஆலோசனையுடன் பாவிக்கவும்.

**பாவற்காய் மகிமை**
**தேனுஜா (30)**
**நாவற்குழி**

**கேள்வி:** பாவற்க்காய் கறி எனக்கு பிடிக்கும். இதை நீரிழிவு உள்ளவர்கள்தான் சாப்பிட வேண்டும் என்கிறார்கள் உண்மையா?

**பதில்:** நீரிழிவிற்கு பாவற்க்காய் நல்லது . ஆனால் நோயாளர் மட்டும் தான் சாப்பிட வேண்டும் என்பதில்லை. நிறைய மருத்துவக் குணங்கள் நிறைந்து எமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து ஆரோக்கியத்துடன் வாழ இயற்கை அளித்த அரும்மருந்து பாவற்காய்.

பாவற்காயை உண்கின்றபோது குடற்புழுக்கள் அழிகின்றது. மேலும் இது மாதவிடாய் ஒழுங்கின்மையை சரிப்படுத்தவும் உதவுகிறது.

பாவற்காய் மட்டுமன்றி அதனுடைய இலையும் வேருமே மருந்தாகின்றது.

பாவற்காய் இலைச் சாற்றில் மஞ்சளை அரைத்து சிரங்கின் மேல் தடிப்பாகத் தடவி வந்தால் இரத்தம் சுத்தம் செய்யப் பெற்று சிரங்கு உதிர்ந்து விடும்.

நீரழிவுக்குக் குணம் தெரியும் வரை ஓர் அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றில் உழுந்தளவு பெருங்காயப் பொடியைக் கலந்து சாப்பிட்டு வர வேண்டும்.

ஓர் அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றுடன் சமபாகம் ஆட்டுப்பால் அல்லது பசுவின் மோர் கலந்து மூன்று நாட்கள் காலையில் சாப்பிட்டு வந்தால் காசநோயை மட்டுப் படுத்தும்.

உடலில் ஏற்ப்படும் சருமநோய்களுக்கு ஒரு கப் பாகற்காய் சூப் எடுத்து அதில் ஒரு டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு கலந்து காலையில் வெறும்வயிற்றில் சாப்பிட்டுவந்தால் மூன்று மாதங்களுக்குள் இரத்தம் சுத்தமாகி தோல் பளபளப்பாகி விடும்.

**மனஅழுத்தம்**
**சரண்யா (28)**
**துன்னாலை**

**கேள்வி:** எனக்கு திருமணமாகி முன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். எல்லோரும் என்மீது அன்பாகவே இருகிறார்கள். ஆனால் பிள்ளைகள் பாடசாலை செல்பவர்கள் இதனால் எனக்கு வீட்டுவேலை அதிகம். இதனாலோ என்னவோ எனக்குகோபம் அதிகம் வருகிறது. சிலவேளைகளில் கணவரை பேசுவதோடு, பிள்ளைகணை அடித்துவிடுகிறேன். பின்பு இதை நினைத்து கவலைப்படுகிறேன். சிலவேளை விரத்தியான எண்ணங்கள் வருகிறது. பயமாக இருக்கிறது. எனக்கேன் இப்படியாகிறது பதில் தாருங்கள்...

**பதில்:** நீங்கள் மன அழுத்திற்குள்ளாகி இருக்கிறீர்கள். இதிலிருந்து நீங்கள் தான் வெளிவரவேண்டும். பிரச்சனைகள் வேலைகள் எல்லோருக்கும் உரியதுதான். எனவே நன்றாக சிந்தித்து செயற்பட்டால் உங்கள் மனத்தை வெல்லலாம்

உங்கள் வாழ்க்கை நடைமுறையை திட்டமிடுங்கள். சில வேலைகளை கணவன் பிள்ளைகள் சேர்ந்து செய்யும் முறையில் அமைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் கணவரோடும் பிள்ளைகளோடும் மனம் திறந்து உரையாடுங்கள். பிரச்சினை பற்றி ஆறுதல் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மனம்விரும்பும்இடங்களைத்தெரிவு செய்து நேரத்தைச் செல விடுங்கள். அது பூங்காவோ, கோயிலாகவோ, கடற்கரையாகவோ இருக்கலாம். இனிய இசையைக் கேட்பதன் மூலம் மனப்பாரத்தை இளகச் செய்யுங்கள்.

உங்களை வாய்விட்டுச் சிரிக்க வைக்கக்கூடிய நண்பர்களுடன் பழகுங்கள் சிரிப்பைத் தரக்கூடிய திரைப்படங்களை பாருங்கள். வாழ்வவென்பது சுமையானதல்ல. அது ஒரு இனிமையான அனுபவம்.

எனக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். எல்லோரும் என்மீது அன்பாகவே இருகிறார்கள். ஆனால் பிள்ளைகள் பாடசாலை செல்பவர்கள் இதனால் எனக்கு வீட்டுவேலை அதிகம். இதனாலோ என்னவோ எனக்குகோபம் அதிகம் வருகிறது.



**சளிக்காய்ச்சல்**
**க.சர்மி (22)**
**மானிப்பாய்.**

**கேள்வி:** சில தினங்களாக மூக்கில் நீர்வடிதல், தலைவலி, லேசான காய்ச்சல் இருக்கிறது. குணமாக மருந்து சொல்லுங்கள்.

**பதில்:** நிலவேம்பு, நெஞ்சிக்கொழுந்து, துளசி, ஆடாதோடை, விஸ்ணுகிரந்தி, சீந்தில்கொடி இவை தனித்தனி ஒரு பிடி அளவு எடுத்து ஒரு தேக்கரண்டி மிளகு எடுத்து கசாயமாக்கி 30மில்லி அளவு 3வேளை குடித்து வரவும். குளிர்ந்த நீரில் சுதர்சன மாத்திரை 2வேளை குடிக்கவும்.

**வாய்ப்புண்**
**தேவசகாயம் (55)**
**கொட்டடி,**

கேள்வி: எனக்கு வாயில் புண்கள் ஏற்படுகிறது. ஈறுகளில் வலியும் ஏற்படுகிறது. உணவு உட்கொள்ள சிரமமப்படுகிறேன். மூலிகை மருத்துவம் செல்லுங்கள் ?

பதில்: அகத்தி இலையை உணவில் சேர்த்து வாருங்கள். மணத்தக்காளி இலையை மென்று திண்ண வாய்ப்புண் குணமாகும். திரிபலா கசாயத்தால் வாய்கொப்பளித்து வாருங்கள். படிகார செந்தூரம் எண்ணெய்யுடன் சேர்த்து காலை மாலை எடுக்கவும்.

**ஆஸ்த்துமா**
**என்.மஞ்சு (40)**
**பரந்தன்.**

**கேள்வி:** எனக்கு ஆஸ்த்துமா நோய் இருக்கிறது. மூச்சுவிட சிரமப் படுகிறேன்.

என்ன மருந்துகள் பாவிக்கலாம்

**பதில் :** ஆயுர்வேத மருத்தவத்தில் இந்நோய்க்கு பல மருந்துகள் சொல்லப்படுகிறது

உமது உடல் நிலைகேற்ற மருந்தை வைத்தியர தெரிவசெய்வதே பொருத்தம் என நினைக்கிறேன்

பொதுதவாக ஆடாதோடைக் கசாயம் சுவாசகுடோரி மாத்திரையுடன் எடுக்கலாம் கிரந்தியுணவுகளை தவிருங்கள்

**பித்த வெடிப்பு**
**மயில்வாகனம் (55 )**
**நீர்வேலி.**

**கேள்வி:** எனது புறங்கால்களில் பித்தவெடிப்பு இருக்கிறது. இரவிலே வேதனையாக இருக்கிறது. குணமாக என்னசெய்யலாம்

**பதில்:** ஆயுர்வேத மருந்து கூசட்டுத்தாபன தயாரிப்பான றொகணிகச என்ற மருந்து நல்ல பயன் தருகிறது .வெளிப்பூச்சாக பாவிக்கவும்.

**படுக்கைப்புண்**
**கேசவன் (45}**
**இருபாலை,**

**கேள்வி :** எனது தந்தையார் வயது 80. பாரிசவாதத்தால் பாதிக்கபட்டு படுக்கையில் இருக்கிறார். அவருக்கு நாரியின் கீழ்ப்புறம் ஆசனப்பகுதி இடுப்புப்பகுதி என்பவற்றில் படுக்கைப்புண்கள் ஏற்படுகிறது. சிகிச்சையில் குணமானாலும் திருப்பவும் ஏற்படுகிறது . என்னசெய்யலாம்?

**பதில்:** உடற்பலவீனமுள்ள உடலசைவுகள் பாதிக்கப்பட்டோர், பாரிசவாத நோயாளிகள், விபத்துக்களால் கை, கால் இழந்து அசைய முடியாத நிலையிலுள்ளோர், உடலில் வலியினை உணர முடியாதோர், நீரிழிவு நோயாளிகள் போன்றவர்கள் நீண்டநேரம் படுக்கையில் ஒரே இடத்தில் இருப்பதால் சதைகளில் அழுதம்எற்பட்டு அந்த இடங்களில் இரத்தொட்டம் தடைப்படுவதால் படுக்கைப்புண் ஏற்படுகிறது.

எனவே தொடர்ச்சியாக படுக்கயிலுள்ள நோயாளர்களை குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒருதடவையேனும் புரட்டி விட வேண்டும். இதனால் ஒரே இடத்தில் தொடர்ச்சியான அழுத்தம் ஏற்படுதல் தவிர்க்கப்படும்.

நோயாளியின் உடலில் ஏற்படும் அழுத்தத்தை குறைப்பதற்காக நீர் அடைத்த மெத்தைகள், காற்றடைத்த மெத்தைகள் போன்றவற்றை பயன் படுத்தலாம். இது வாங்க வசதி குறைந்தோர் மிருதுவான தலையணைகள், மெத்தைகளை பயன் படுத்தலாம்.

நோயாளியின் உடலை எப்போதும் சுத்தமாகவும் உலர்வாகவும் வைத்திருக்க வேண்டும். பொதுவாக இந்நோயாளிகள் தம்மை அறியாமலேயே மலம், சலம் கழிப்பர். இதனால் இடுப்புப்பகுதி, மலவாசல் போன்றவற்றை தொடர்ச்சியாக அவதானித்து உலர்வாக பேண வேண்டும்.

ஏதாவது இடத்தில் . புண் தோன்றுவதற்குரிய அறிகுறிகள் தென்படின் அந்த இடத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும். நீரழிவுநோயாளர் எனில் அதிக கவனம்வேண்டும் பச்சைகளிம்பு, பச்சை எண்ணெய், போன்ற சித்த மருந்துகள் பயன்தரும். பாவித்துப் பார்க்கவும்.







# அடுத்த சங்கக்கார ரெடி!

கடந்த வாரம் முழுக்க இலங்கை கிரிக்கெட் விமர்சகர்கள் தலையில் தூக்கிவைத்து கொண்டாடுவது லஹிரு மிலிந்த என்ற இளம் புயலை நடந்து முடிந்துள்ள மாகாணங்களிற்கிடையிலான 20 கிரிக்கெட் தொடரின் அபாயகரமான வீரர் மிலிந்த என்ற இளம் புயல்தான்.

வெறும் 21 வயதுதான். ஆனால் அடித்து நொருக்குவது மிலிந்தவிற்கு அல்வா சாப்பிடுவதைப் போலிருக்கிறது. ஆட்டமென்றால் அப்படியொரு ஆட்டம்... அனல் பறக்கிறது. இடதுகை ஆட்டக்காரரான மிலிந்த ஒரு விக்கெட் கீப்பரும் கூட.

மாகாண அணிகளில் மிலிந்த இடம்பிடித்தது காலி கார்டியன்ஸ் அணிக்காக. தேசிய அணியின் விக்கெட் கீப்பர் சந்திமாலின் அணியிது. பெரும்பாலான போட்டிகளில் சந்திமால்தான் விக்கெட் கீப்பிங் செய்தார். மிலிந்தவின் பணி ஆரம்பத்தில் இறங்கி அதகளம் செய்வது.

இந்த தொடரின் ஆரம்பம் வரை மிலிந்தவை அவ்வளவாக யாருக்கும் தெரியவில்லை. காலி கார்டியன்ஸ்ற்காக களமிறங்கிய போது, யாரே ஒரு பையன் இறங்குகிறான், வைத்து ஓட்டலாம் அல்லதுஓரம்போஎனவிக்கெட்டை பெயர்க்கலாமென்றுதான் பந்து வீச்சாளர்கள் நினைத்திருப்பார்கள். ஆனால் முதல்பந்திலிருந்தே காட்டு... காட்டு என காட்டத் தொடங்கி விட்டார் பையன். இந்த தொடரில் அவரது ஸ்ரைக்ற் ரேற் 177க்கு மேல்.

மிலிந்த ஆடும் ஸ்ரைல், வெளிப்படுத்தும் திறன் எல்லாவற்றையும் பார்ப்பவர்கள் இதோ அடுத்த சங்கக்கார ரெடி என்கிறார்கள்.

உலகத்திற்கு இப்பொழுதுதான் தெரிந்தாலும், அவரை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், இலங்கை அணியின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக மிலிந்த மாறுவார் என அடித்துக் கூறுகிறார்கள். முதல்தர போட்டிகளில் இவரது அதிகபட்ச ஓட்டம் 191.

இடதுகை ஆட்டப்பாணி, அசத்தல் ஆட்டம், விக்கெட் கீப்பிங் என எல்லாமும் சேர்ந்து அடுத்த சங்கக்கார என மிலிந்தவை எல்லோரும் தலையில் வைத்து கொண்டாடுகிறார்கள்.

சங்கக்கார விட்டுச் சென்ற இடம் நிரப்பப்படாமலேயே உள்ளது. விரைவிலேயே மிலிந்த போன்ற யாராவதொருவர் அதை நிரப்பினால் நாட்டிற்கு நல்லது.



## மகுடம் தரித்த மட்டக்களப்பு வீரர்கள்

தேசிய பரா ஒலிம்பிக் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்டு சாதித்த வீர, வீராங்கணைகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வாரம் நடந்துள்ளது. பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானத்தில் கௌரவிப்பு நிகழ்வு நடந்துள்ளது. இம்முறை பரா ஒலிம்பிக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்டவர்கள் 4 தங்கம், 8 வெள்ளி, 11 வெண்கல பதக்கங்கள் அள்ளி சாதித்துள்ளனர். இதில் நொச்சிமுனை விழிப்புலனற்றவர் பாடசாலை மாணவர்கள் மட்டுமே 3 தங்க பதக்கங்களை வென்றிருந்தார்கள். மட்டக்களப்பு அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டு சாதனையாளர்களை கௌரவித்தனர். 100, 200 மீற்றர் ஓட்டம், குண்டெறிதல், பரிதிவட்டம் வீசுதல், ஈட்டியெறிதல், நீளம் பாய்தல் உள்ளிட்ட விளையாட்டுக்களில் மட்டக்களப்பு வீரர்கள் பதக்கம் வென்றிருந்தனர்.






# சோதிடம் தரும் வாரபலன் பன்னிரண்டு இராசிகளுக்கும்
# 07.02.2016 முதல் 13.02.2016 வரை

### மேடராசி

பொருள் சேதம், விரயம், நோய் பிணி துயரம், கஸ்டம், வழக்குகள் பிணக்குகள், மனக்கவலைகள், இவற்றுடன் பார்க்கும் கருமங்களில் வெற்றி கிட்டுதல், பொன்,பொருள் இலாபம், தான தரும காரியங்கள் இருத்தல், அதிகாரம் செலுத்தும் நிலை,இலட்சுமிகரமான நிலைபேறு, லாபமீட்டுதல், மனச்சந்தோச நிலைகள் என்பவற்றையும் காட்டும்.

**அதிர்ஸ்ட நாள்: 09,10,12, திகதிகள்.**

### இடபராசி

பகை உருவாதல், நோய் பிணி துயரம், மறியல் அபாயம் இருக்கும், நிலைகளில் மாற்றம், மனப்பயம் அதிகரித்தல், கருமங்களுக்கு இடையூறு ஏற்படல். மறதிக்குணம் இருத்தல், வயிற்றில் நோய் அதிகம் காணப்படல், நஸ்டநிலை, கௌரவக்குறைவு, பணச்செலவு இவற்றுடன் திரவிய லாபம், குடும்பசுகம் கிட்டுதல், சந்தோசநிலையும், அதிகாரம் காட்டும் நிலையும் அமையும்.

**அதிர்ஸ்ட நாள்: 08,10,12 திகதிகள்.**

### மிதுனராசி

செய்கருமங்கள் நஸ்டநிலை, சச்சரவுகள் பிணக்குகள், பெண்களினால் கெடுதி, நோய்ப்பிணி, பிரயாணங்களில் பய நிலை, கருமங்கள் தாமத நிலை, தொப்புளைச் சுற்றிய நோய் காணப்படுதல், இவற்றுடன் வெற்றி வாய்ப்புக்கள், பொருள் சேர்தல், லாபமீட்டல், மனதில் சந்தோச நிலை தோன்றுதல், செல்வமான நிலைகள் காணப்படுதல், விவேகமாக செயற்படுதல், பலவும் சாதகமான நிலைக்கு வருதல், போசனசுகம், தேகசுகம் கிட்டுதல் இருக்கும்.

**அதிர்ஸ்ட நாள்: 10,12,13 திகதிகள்.**

### கடகராசி

நோய் பிணியால் பணவிரயம், பகைகள் காணப்படுதல், பல்வித பொருள் விரயம், பிணக்குகள், சச்சரவுகள், மனத்துயரம், இருக்கும் நிலைகளில் மாற்றம், கஸ்டநிலை, மனப்பயமிருத்தல்,பிரயாணங்களில் எச்சரிக்கை, இவற்றுடன் பண வரவுகள் இருத்தல், நேரகால உணவு,உறக்கம், தேகசுக மேன்மை என்பனவும் இருந்து வரும்.

**அதிர்ஸ்ட நாள்: 08,10,11, திகதிகள்.**

### சிம்மராசி

மந்தமான செயற்பாடு, கெடுதிகள், பகைநிலை தென்படுதல், இடையிடையே நோய் பிணி துயரம், கஸ்டநிலை, இவற்றுடன் பொருள் விரயம், எடுத்த கருமங்களில் வெற்றி கிட்டுதல், லாபமீட்டுதல், புகழ்கிட்டுதல், சாதகமான நிலை, நல் உணவு, நல் உறக்கம், தேகசுகமிருத்தல் என்பன அமையப்பெறும்.

**அதிர்ஸ்ட நாள்: 07,10,11, திகதிகள்.**




### கன்னிராசி

நஸ்டம், மந்தநிலை, தேகசுகப் பாதிப்பு, மனதில் சோகநிலை உருவாதல், குடும்பத்தில் சச்சரவு நிலை, கௌரவக்குறைவு காணப்படுதல், செலவீனம், எதிரி, பகையாளி தொல்லை, இவற்றுடன் பொன், பொருள் இலாபம், காரியசித்தி, இனசனநண்பர்கள் சேர்க்கை, ஜஸ்வரியம், மனச்சந்தோசம் இருத்தல் என்பனவும் தரும்.

**அதிர்ஸ்ட நாள்: 09,10,12, திகதிகள்.**

### துலாம்ராசி

இருக்கும் ஸ்தான நிலைகளில் மாற்றம், புத்தி மந்த நிலை, தேகபிணிவிரயம், எதிரி, பகையாளி தொல்லை, மனச்சஞ்சலம், காரிய தாமதம்,பலவழிகளில் சேதமிருத்தல், விவாதநிலை இவற்றுடன் அதிகார நிலை, மனச்சந்தோசம், நல்ல கல்வி மேன்மை, சந்தேகப்பட்டு பணி செய்தல், எதிர்பார்க்கும் லாபம் அதிகமாய் கிடைத்தல், மற்றும் ஆடை ஆபரணம் பொருள் சேரும் பலன்களையும் அடையச் செய்யும்.

**அதிர்ஸ்ட நாள்: 08,09,12, திகதிகள்.**

### விருச்சிகராசி

ஏமாற்றம் அடையும் நிலை, இருக்கும் நிலைப்பாடுகளில் மாற்றம் இருத்தல், பயவுணர்வுகள் அதிகமாயிருத்தல், பகை வந்து மறைதல், கௌரவம் பாதிக்கப்படுதல், செலவுகள் அதிகமாயிருத்தல், ஸ்தானம் மாறும் நிலை, நஷ்ட நிலை, மனத்துக்கம், இவற்றுடன் குடும்ப சுகம், செல்வம், சேமிப்பு நிலை, கருமங்களில் நன்மை கிடைத்தல், தேகசுகம் கிடைத்தல் மற்றும் செலவுகள் தொடரும்.

**அதிர்ஸ்ட நாள்: 09,12,13 திகதிகள்.**

### தனுராசி

மனக்கவலை, விவாதப்படுதல், நஸ்டநிலை,இடையில் கருமங்களில் தடங்கல் நிலை காணுதல், நோய் பிணி செலவீனம், சத்துருபயம் இவற்றுடன் குடும்பசுகம் அனுபவித்தல்,லாபநிலை காட்டுதல், பண்பாக நடந்து கொள்ளல், நிர்வாகி எனும் நிலை, ஆடை ஆபரணம் சேர்தல், செல்வம் சேமிப்பு நிலை, தேக ஆரோக்கிய நிலையும் காண்பிக்கும்.

**அதிர்ஸ்ட நாள்: 08,11,12, திகதிகள்.**

### மகரராசி

தேகசுகம் பாதிப்புறல்,பிரயாணம் மேற்கொள்ளல், அவமதிப்புப் பெறுதல், நஷ்டமான நிலை தோன்றுதல், துக்க நிலை, தடைநிலை, இடைஞ்சல் நிலை, செலவீனம் அதிகமாய் இருத்தல், மனப்பயம் காணப்படுதல், இவற்றுடன் வார இறுதியில் தேகசுகம் நன்றாய் அமைதல், குடும்பசுகம் அனுபவித்தல், நல்ல உறக்கம், நல்ல உணவு என்பவையும் காணப்பலன் செய்யும்.

**அதிர்ஸ்ட நாள்: 08,10,12, திகதிகள்.**

### கும்பராசி

விவேகம் இல்லாமை, பதவி நிலை, மடமை நிலை என்பன பாதிக்கப்படுதல், நோயால் அவஸ்தைப்படுதல், குற்றச்செயலில் சிக்கும் நிலை, கருமம் எதுவாயினும் நஷ்டநிலை, அபகீர்த்தி நிலை காணப்படுதல், செலவீன் இடையிடையே இருந்து வருதல், பணவிரயம், கெடுதல்கள், இவற்றுடன் தேகசுகம் நன்றாய் அமைதல், குடும்பசுகம் போசன சுகம் என்பவையும் நடந்தேறும்.

**அதிர்ஸ்ட நாள்: 08,10,12, திகதிகள்.**

### மீனராசி

மனத்துயரம், வாகனம் விஷம் சார்ந்தவை குறித்து எச்சரிக்கை, செய் கருமங்களில் லாபம் இன்மை, சிறு சிறு அவமானம் சண்டை சச்சரவு இருத்தல். நோய் பிணி துயரம் செலவீனம் கூடுதல், இவற்றுடன் நல்ல சேமிப்பு நிலை, செல்வம் என்பன காணப்படுதல், நன்மைகள் படிப்படியாய் விருத்தி நிலை காணுதல், மனச்சந்தோசம், எண்ணிய கருமம் சித்தியாய் முடிதல் போன்றவை இருக்கப் பெறும்.

**அதிர்ஸ்ட நாள்: 07,09,11, திகதிகள்.**

**சந்திராஷ்டமம்:** பொதுவாக ஜென்ம ராசியில் இருந்து 8 ஆம் நிலைக்கு சந்திரன் வரும் போது சந்திராஷ்டமம் என்று சொல்லப்படும்.அவ்வாறு அமையும் நாட்களில் கஸ்டம், நோய், பிணி, அலைச்சல், இழப்புக்கள், துன்பம், இவை நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

- மேடராசிக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் இல்லை.
- இடபராசிக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் இல்லை.
- மிதுனராசிக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் 7,8 ஆம் திகதிகள்.
- கடகராசிக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் 9,10 ஆம் திகதிகள்.
- சிம்மராசிக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் 11,12 ஆம் திகதிகள்
- கன்னிராசிக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் 13 ஆம் திகதி மட்டும்.
- ஏனைய ராசிகளுக்கு சந்திராஷ்டமம் இவ்வாரம் இல்லை.



# அழகின் இரகசியம் 4



திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி



இன்று பெரும்பாலானவர்களுக்கு இளம் வயதிலேயே நரை வர ஆரம்பிக்கின்றது. இதற்கான காரணங்கள் பரம்பரை பித்தம் அதிகமாக இருப்பது. ஊட்டச்சத்து குறைபாடுஇ உஷ்ணம் அதிகமாதல் இவற்றில் ஏதேனும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**தீர்வு**

நெல்லிக்காய் பொடி 4 டிஸ்பூன்
வல்லாரைப் பொடி 4 டிஸ்பூன்

இதனை நீரில் கலந்து பேஸ்ட் ஆக்கிகொண்டுதலையில்வெள்ளை முடி உள்ள இடங்களில் தடவவும். இதே கலவையை கொஞ்சம் சாப்பிடவும் செய்யலாம். நரை முடிக்கான சிகிச்சை இது.

நெல்லி இலை 10 கிராம்(உலர்ந்தது)
செம்பரத்தி பூ 10 கிராம்

இவற்ரை இரண்டு டிஸ் பூன் ஒலிவ் எண்ணெயை சூடாக்கி அதை இவற்றுடன் போட்டு வடி கட்டி வைத்து தலைக்கு மசாச் செய்ய உபயோகிக்கலாம்.

கருவேப்பிலை பொடி 100 கிராம்
நல்லெண்ணை 250 மில்லி லீற்றர்

நல்லெண்ணையில் கறிவேப்பிலை பொடியை சேர்த்து காய்ச்சி வடி கட்டி தலையில் தேய்க்கலாம். அல்லது. கறிவேப்பிலையை நன்கு வேகவைத்து ஆறிய பின்னர் எண்ணெயில் போட்டால் அதிலுள்ள சத்து எண்ணெயில் இறங்கும். இதை தலையில் தேய்த்தால் தலை நரை போகும்.

நல்லெண்ணை 500 மில்லிலீற்றர், ஒலிவ் எண்ணெய் 500 மில்லி லீற்றர், கறிவேப்பிலை பொடி 100 கிறாம், கரிசலாம் கண்ணி பொடி 100 கிராம், திரிபலா பொடி 25 கிராம்

எண்ணெயை சூடு செய்து மேற் கண்ட பொடிகளை எண்ணெயில் கலக்கவும் (எண்ணெயை கொதிக்க வைக்க கூடாது. ) எண்ணெய் ஆறியதும் வடி கட்டி இரண்டு நாட்கள் நல்ல வெயிலில் (ஒரு மணி நேரம்) வைத்திருந்து காற்று புகாத போத்தலில் ஊற்றி வைத்து தலையில் தேய்த்து வந்தால் இள நரை மறைந்து முடி கறுப்பாகும்.

செம்பரித்தி பூவை நீரில் ஊற வைத்து அரைத்து அதன் சாற்றை தலையில்பூசி வந்தால்இள நரையை தடுக்கும். முடி மென்மையாகவும் இருக்கும். முடி கொட்டாமலும் இரக்கும். இது உடலுக்கு குளிர்ச்சியும் கூட. செம்பரத்தி ஜெல்லாகவும் கிடைக்கின்றது அதையும் தேய்க்கலாம்.

மருதாணிப் பொடி 1 டிஸ்பூன்
கரிசாலை பொடி 1 டிஸ்பூன்
வல்லாரை பொடி 1 டிஸ்பூன்
பூந்திக்காய் பொடி 1 டிஸ்பூன்
நெல்லிக்காய் பொடி 1 டிஸ்பூன்

இவற்றை 100 மில்லி லீற்றர் தேங்காய் பாலில் கலந்து தலையில் தேய்க்கவும். அரை மணி நேரம் ஊறிய பின்னர் தலை முடியை அலசவும்.

**இள நரையை தடுக்கும் எண்ணெய்.**

பச்சை நெல்லிக்காய் 100 கிராம்
மருதாணி இலை 100 கிராம்
கறி வேப்பிலை 100 கிராம்
வெந்தய கீரை 50 கிராம்

இவற்றை ஒரு லீற்றர் நல்லெண்ணையுடன் சேர்த்து சூடு பறக்க காய்ச்சவும். இதை 5 நாட்கள் அப்படியே வைத்து விட வேண்டும். பிறகு அதை வடி கட்டி உபயோகப்படுத்தலாம். இந்த எண்ணெயை தினமும் தலைக்கு தேய்க்கலாம். தலைக்கு குளிர்க்கவும் உபயோகப்படுத்தலாம்.

**முடி கொட்டுதல்**

செம்பரத்தி ஜெல் 4 ரேபில்ஸ்பூன்
வல்லாரை பொடி 2 டிஸ்பூன்

இவற்றை கலந்து தலையில் தேய்த்து 20 நிமிடங்கள் கழித்து முடியை அலசவும். இது உடலுக்கு குளிர்ச்சியும் கூட. நினைவாற்றலையும் அதிகரிக்க செய்யும்.

**கூந்தல் வளர்ச்சிக்கான ஆரோக்கிய ரொனிக்**

வேப்பம் பழம்
வால்நட்
முக்கா பொடி
முண்டூர் பொடி
வல்லாரை பொடி
பிருங்கராஜ் பொடி இவ்வளவும் 4 டிஸ்பூன். ( காய வைத்து பொடி செய்தல்.)

இவை அணைத்தையும் பாதாம் எண்ணெயில் (25 மில்லி லீற்றர்) மற்றும் தேங்காயெண்ணெயில் (25 மில்லி லீற்றர்) கலக்கவும். இதை நீல நிற கண்ணாடி பாத்திரத்தில் வைத்து தினமும் 8 மணி நேரம் சூரிய வெளிச்சம் படும் படி வைக்கவும். சுமார் ஒன்றரை மாதம் வைத்திருந்து பின்னர் வடி கட்டி தினமும் தலைக்கு தடவி வரவும். இது சைனஸ் பிரச்சினைகளை கூட தீர்க்கும்.

அருமையான கூந்தலுக்கு ஆரோக்கிய டொனிக் இது. மேற் கூறிய பொருட்கள் மூலிகை மற்றும் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்.

**தலை முடியை அலசுவதற்கான ஸ்பெசல் பொடி**

சீகைக்காய் 100கிராம்
பூந்தி காய் 50 கிராம்
முல்தானி மெட்டி 50 கிராம
ஒரேஞ் தோல் பொடி 50 கிராம்

இவை அனைத்தையும் அரைத்து வைத்து கொண்டு தலையில் தேய்த்து குளித்து வரலாம்.

**ஹியாப் பெக்**

தலை முடியை பாதுகாக்க ஹியா பெக் போட்டு ஊற வைத்து முடியை அலசலாம்.

நெல்லிக்காய் பவுடர் 4 ரேபில் ஸ்பூன்
செம்பரத்தி பவுடர் 4டேபில் ஸ்பூன்
பூந்திக்காய் பவுடர் 4டேபில் ஸ்பூன்
கத்தாளை ஜெல் 6இல் இருந்து எட்டு டேபில் ஸ்பூன்

இவை அனைத்ததையும் கலந்து 15ல் இருந்து 20 நிமிடங்கள் வரை ஊற வைத்து தலை முடியை அலசுங்கள். தலை முடி பளபளப்புடன் இருக்கும். இது உடலுக்கு குளிர்ச்சியையும். முடிக்கு கருமை நிறத்தையும் இரும்பு சத்தையும் கொடுக்க கூடியது.

தொடரும்...

## வெங்காய சட்னி

**தேவையானவை:** பெரிய வெங்காயம் 1/2 கிலோ, புளி பாக்களவு உருண்டை, உப்பு தேவைக்கேற்ப, சீனி 4 தேக்கண்டி, தூள்2 தேக்கரண்டி, மஞ்சள் தூள் 1தேக் கரண்டி, எண்ணெய் தேவைக்கேற்ப

**செய்முறை:** வெங்காயத்தை வதக்கி பொன்னிறமாக வதங்கி வர கரைத்த புளி உப்பு தூள் சீனி எல்லாவற்றையும் போட்டு கிளறி ஆற வைத்து பான் றொட்டி போன்ற உணவுகளுடன் சேர்த்து சாப்பிடலாம். இதனை நன்கு ஆறிய பின்னர் போத்தலில் அடைத்து வைத்து 1 வாரம் வரை பாவிக்கலாம்.

## கண்ணுக்கு மை அழகு

கண்ணிற்கு மை அழகு என்பார்கள். சில பெண்கள் கண் மை பாவிப்பதை தினசரிப் பழக்கமாகவே வைத்துள்ளார்கள். இந்தியாவில் பெட்டுக்கு சமமாக கண் மையை தமிழ் பெண்களின் அடையாளமாக பார்க்கிறார்கள். நமது பெண்களில் சிலர்தான் அன்றாடம் கண்மையிடுபவர்கள். ஆனால், ஏதாவது நிகழ்வுகள் என்றால் எல்லோருமே மைதீட்டுவார்கள். பெண்களின் அழகில் முக்கிய பங்குவகிக்கும் கண்மையை தீட்டும்போது கவனிக்க வேண்டியவை இவை தான்.

1 விலை குறைந்த கழித்தன்மை அதிகம் கொண்ட கண் மை அலேஜிக்கை ஏற்படுத்த கூடும். எனவே அவற்றை தவிர்ப்பது சிறந்தது.

2 கண்களின் கீழ்ப் பகுதியில் வெளிப்புறத்தாலே மை தீட்ட வேண்டும். கண் விழியில் படாதவாறு.

3 முகம் கழுவும் பொழுது கடுமையாக மை தீட்டுபவர்கள் எண்ணெய் கொண்டு துடைத்துவிட்டும் மற்றவர்கள் சாதாரணமாகவும் கழுவலாம்.

4 கிளிப் குச்சி போன்றவற்றை பயன்படுத்தி கண் மை தீட்டுவதை தவிர்க்க வேண்டும். நகங்கள் இல்லாத கை விரல்கள்



# கருப்பை கழுத்து புற்றுநோயும், சுக வனிதையர் சிகிச்சா நிலையமும்



வைத்தியகலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை - நல்லூர்



இலங்கையில் மிக அதிகமாக பெண்களை பாதிக்கும் புற்று நோய்களில் ஒன்றாக கருப்பை கழுத்து புற்றுநோய் விளங்குகிறது. பொதுவாகஇப் புற்றுநோய் சிகிச்சை அளிக்க முடியாமல், நோய் முற்றிய நிலையிலேயே இனங்காணப் படுகிறது. இந்நோய் ஆரம்ப நிலையில் இனங்காணப்பட்டால் வெற்றிகரமாக சிகிச்சைமூலம் குணப்படுத்த முடியும்.

கருப்பை கழுத்துப் புற்று நோயானது கருப்பை கழுத்தின் புறத்துவாரத்தின் அயற்பகுதியி லேயே ஆரம்பமாகிறது. மேற்படை யில் கலங்கள் அசாதாரணமாக பிரிகையடைய தொடங்குவது ஆரம்பத்தில் நிகழும் நிகழ்வாகும். இவ்வாறு அசாதரணமாக பிரிகை யடையும் கலங்கள் புற்றுநோய் கலங்கள் அல்ல. எனினும் அவை பின்னர் புற்றுநோய்க் கலங்களாக மாற்றமடைய கூடும்.

கருப்பை கழுத்தின் மேற்பரப்பு படையில் அசாதரண நிலை உருவாகுமாயின் இந்நிலை வெளியே எந்த அறிகுறியும் அற்ற நிலையில் 5 தொடக்கம் 15 வருடங்கள் வரை இருக்க கூடும். இவ்வாறு அசாதாரணமான நிலை புற்று நோய்க்கு முந்தைய நிலை (Precancerous stage) எனப்படும்.

515 வருடங்கள் கடந்த பின் கருப்பையை சூழவுள்ள பகுதிகளி லும் அதற்கப்பாலும் மிக விரை வாகப் பரவி செல்கின்றது. இவ்வா றான ஒரு நோய் முற்றிய நிலை யில் வெளியே அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கின்றன. இவ்வாறான நிலையில் புற்றுநோய் இனங்காணப் படுமிடத்து முற்றாக குணப்படுத் துவது கடினமாகும். இதனால் மரணிக்கும் நிலைக்கு பெண்கள் ஆளாகின்றனர்.

எனினும் இவ்வாறான நிலையை தடுப்பதற்காக புற்றுநோய்க்கு முந்திய நிலையில் (Precancerous stage) அசாதாரண நிலையை இனங்காண்பதற்காக கிடைத்த வரப்பிரசாதமே pap smear எனப்படும், கருப்பை கழுத்துப் பாய பூச்சு பரிசோதனையாகும். இப் பரிசோதனை மூலம் இவ்வாறான சாதாரண நிலையை இனங்காண முடியும்.


இதனைக் கருத்திற் கொண்டு தேசிய மட்டத்தில் சுக வனிதையர் சிகிச்சா நிலையத்தினூடாக ஒரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம், இலங்கையின் நோயியல் வைத்தியர் சங்கம், இலங்கைப் பெண் நோயியல் வைத்தியர் சங்கம், ஆய்வு கூட சேவைகள் ஆகிய தேசிய இணைப் பாக்கத்தின் கூட்டு ஆலோசனைப் படி கருப்பைக் கழுத்து பாய பூச்சி பரிசோதனையை ஒவ்வொரு 35 வயதை அடைந்த பெண்களுக்கும் பரிசோதித்தல் ஆகும்.

இந் நிலையில் உங்களுக்குள் அசாதாரண நோய் நிலையை உடைய பெண்கள் யாவரும் புற்று நோய்க்கு ஆளாகின்றனரா? என்கின்ற வினா எழக்கூடும். உண் மையில், கணிசமான பெண்களுக்கு அசாதாரண நிலை இருப்பினும் அவை புற்றுநோயாக மாற்றம் அடைவது இல்லை. அவை சிகிச்சை இன்றியே மீண்டும் சாதாரண நிலைக்கு வருகின்றன. எனினும், வைத்தியர்களினால் இந்த அசாதாரண நிலை உடைய பெண் களிற்கு புற்றுநோய் வரும் என்றோ, இல்லை வராது என்றோ கூற முடியாது. எனவே 35 வயதடைந்த பெண்கள் யாவரையும் பரிசோதித்து அவர்களுக்கு அசாதாரண நிலை இனங்காணப்படுமிடத்து தொடர் பரிசோதனைகளுக்கும் விசேட பரிசோதனைகளுக்கும் விசேட நிபுணர்களிடம் அனுப்பி வைக்கப் படுகின்றனர்.


விசேட நிபுணர்கள் தொடர் பரிசோதனை செய்து அவை புற்றுநோயாக மாறும் சந்தர்ப்பங்கள் உருவாகுமாயின் சிகிச்சை அளிக்க சிபாரிசு செய்வர்.

ஒருவர் கருப்பை கழுத்து பாய பரிசோதனையை வெளியே செய்ய பல ஆயிரங்களை செலவு செய்ய வேண்டிவரும். ஆனால், நீங்கள் சுக வனிதையர் சிகிச்சை நிலையம் ஊடாக எதுவித கட்டண அறவீடும் இன்றி இலவசமாகச் செய்து கொள்ள முடியும்.


உங்கள் குடும்ப நல உத்தியோகத் தரின் ஊடாக (mid wife) உங்களை பதிவுசெய்வதன் மூலம் இப்பரிசோத னையை உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரியூடாக செய்து கொள்ள முடியும். அது மட்டு மல்லாது உங்கள் ஏனைய தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள் (குருதி அமுக்கம், நீரிழிவு, குருதி குளுக்கோசளவு, உடற்திணிவுச் சுட்டி, வாய்ப் புற்றுநோய், மற்றும் சுகாதார பரிசோதனை) போன்ற வற்றையும் பெற்றுக் கொள்ள முடியும். எனவே 35 வயதை அடைந்த பெண்கள் அனைவரும் உங்கள் பகுதி குடும்பநல உத்தியோகத்தரை அணுகி இப் பரிசோதனையை செய்வதன் மூலம் கருப்பை கழுத்து புற்றுநோய் ஆபத்திலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.



மிகவும் முற்றிய நிலை அடைந்த கருப்பை கழுத்து புற்று நோய்




கருப்பை கழுத்து புற்று நோய்




புற்று நோய் ஆரம்ப நிலை, நடுநிலை, கடைசி (முற்றிய ) நிலை

# மெட்டி சொல்லும் விஷேசம்



பெண்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு சடங்கும் ஒவ் வொரு முக்கியத்துவம் என்பார்கள் நமது பெரியவர்கள். அதனால் தான் சடங்கு சம்பிரதாயங்களை சரி வர நடத்துகின்றோம் அல்லவா. ஆனால் காலத்தின் போக்கில் பல சம்பிரதாயங்கள் மறைந்து போனா லும் திருமணச்சடங்கின் மெட்டி அணிவித்தல் என்பது அன்றும் இன்றும் உயிர்ப்புடன் வாழும் சடங்கு முறையாகும்.

மெட்டியணியும் விரல் நீளமாக இருந்தால் கணவனுக்கு அடங்கா தவள் என்று முன்னோர் நம்பி னார்கள். மெட்டியணிபவள் மனம் கட்டுப்பட்டவளாக, திருமணம் செய்தவள் என்ற அடையாளத்தை கொடுக்கும் என்ற நம்பிக்கைகளை எல்லாம் மீறி மெட்டி ஏன் அணிவது என்பதற்கு விஞ் ஞானபூர்வமான உண்மையும் உள்ளது. அதனால்தான் இன்றும் நமது திருமணச்சடங்குகளில் மெட்டி அணிவித்தல் முறை உயிரோடு வாழுகின்றது என்றம் கூறலாம்.

அப்படி என்ன விஷேசம் மெட்டியில் உண்டு?

அது வேறொன்றுமில்லை. பெண் களின் கருப்பை நரம்புகளுக்கும் கால் நரம்புகளுக்கும் ஒரு வித தொடர்புள்ளது. இதனால் காலில் மெட்டி அணியும் பொழுது கருப்பையின் நீர்ச் சமநிலை சரியாக இருக்கிறது. அதுவும் வெள;ளியில் மெட்டி செய்து போடும் பொழுது வெள;ளியில் உள்ள ஒருவித காந்த சக்தி கால் நரம்புகளின் ஊடாக ஊடுருவி நோய்களை நிவாரணம் செய்யும் ஆற்றல் உடையது.

இதைவிட இன்னுமொரு கருத்து, பெண்கள் கர்ப்பம் அடையும் பொழுது மயக்கம், வாந்தி, சோர்வு, பசியின்மை ஏற்படும். கர்ப்ப காலத்தில் இந்த கால் நரம்புகளை குறிப்பாக மெட்டி அணியும் நரம்பை அழுத்தி தேய்த்தால் மேற்கண்ட நோவுகள் குறையும். இதனை எப்பொழுதும் செய்ய முடியாது. இதற்காக தான் மெட்டி அணிவித்தார்கள். காரணம் இயற்கையாகவே அழுத்தி நோயை குறைக்கின்றது. கருப்பை பாதிப்பில் இருந்து பெண்கள் பாதுகாப்பு பெற தான் மெட்டி அணிவதை நமது மூதாதையர்கள் கடைப்பிடித்தார்கள் என்கிறார்கள்.

1-ம் பக்க தொடர்ச்சி

போர்த்துக்கேயரின் வருகையுடன் முடிவிற்கு வந்தது. யாழில் அரசபரம்பரைக்குரிய சங்கிலியன்தோப்பு, அரண்மனைக்கு உரித்துள்ள குடும்பத்தின் வாரிசு இவர்.

தற்பொழுது நெதர்லாந்தில் வசித்து வருகிறார். தற்போதும் அரச சம்பிரதாயங்களை கைவிடாமல் வாழ்ந்து வருகிறார். 2005ம் ஆண்டு அரசகுடும்ப உறுப்பினர்களின் ஏகோபித்த சம்மதத்துடன் அரசகுடும்பத்தின் தலைமை பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சம்பிரதாய ராஜாவுடனான நேர்காணல் இது.

**1. யுத்த சமயத்தில் இராணுவம், புலிகள் இருதரப்பையும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுமாறு கடும் தொனியிலான எச்சரிக்கையொன்று வெளியிட்டிருந்தீர்கள். பின்னர் அதுபற்றி நீங்கள் எதுவும் பேசவில்லை. உங்களது யாழ்ப்பாண இராச்சியத்தில் இன்னும் உயர்பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. மக்கள் அகதி முகாம்களில் வாழ்கிறார்கள். அது பற்றி நீங்கள் பேச மாட்டீர்களா?**

ஆம். போரினுடைய இறுதி நாட்களில் போரை நிறுத்துவதற்கும் சரணடைவதற்கும் இன்னும் கால அவகாசம் உள்ளதாகக் கூறியிருந்தேன். அந்தக் கட்டத்தில் இரு தரப்பினரும் போராடிக் கொண்டிருந்ததுடன் என்னுடைய பேச்சையோ அல்லது சர்வதேச அமைப்புக்களினுடைய பேச்சையோ செவிமடுக்கும் நிலையிலிருக்கவில்லை.

நான் நினைக்கவில்லை இலங்கை அரசாங்கம் இராணுவ முகாம்களை அகற்றும் என்று. ஆனால் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும். அண்மையில் அவர்கள் வடக்கில் தங்கள் தலையீடுகளைக் குறைத்துக்கொண்டதாக ஊடகங்கள் வாயிலாக அறியப் பெற்றேன்.

என்னுடைய புத்தாண்டுச் செய்தியிலும் பிற பத்திரிகை நேர்காணல்களிலும் இடம்பெயர்ந்த மக்கள் பற்றியும் அவர்கள் சொந்த இடங்களில விரைவில் தாமதமின்றி மீள்குடியமர்தப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளேன்.

இனி போரைப் பற்றிக் கதைப்பதையோ மக்களை பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள் என்று பெயரிடுவதையோ நிறுத்தவேண்டிய நேரம். யுத்தம் முடிந்துவிட்டது. போரின் காரணமாக மக்கள் தங்களுடைய வாழ்க்கை முறைமை, அன்பிற்குரியவர்கள், கலாச்சாரம் ஆகிய அனைத்தையும் இழந்துவிட்டனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு நாம் இடம் கொடுக்கவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

**2. நீங்கள் யாழ்ப்பாண அரச பரம்பரையின் வாரிசு. இப்பொழுது வெளிநாட்டில் வாழ்கிறீர்கள். அங்கு வாழ்க்கை எப்படியுள்ளது. சொந்த நாட்டிற்கு திரும்ப வேண்டுமென்ற ஆசையெல்லாம் இல்லையா?**

என்னுடைய உயிருக்கு ஆபத்து இருந்ததால் இலங்கயை விட்டு வெளியேறினேன். என் சொந்த நிலமல்லாத ஒரு தேசத்தில் வாழ்கின்றேன். என்னுடைய தேசத்தை விட்டு வந்த நாள் முதல் என் மனமும் இருதயமும் அங்கேயே இருக்கின்றது. நான் இலங்கையில் நடைபெறும் நிலமையை நன்கு அறிவேன். அன்றாடம் நாட்டில் நிகழும் தகவல்களோடு தொடர்பில் உள்ளேன்.

என்னுடைய கடமைகள் என்னை ஆக்கிரமித்துள்ளன. நான் லண்டனில் சர்வதேச முடியாட்சிக் குழு உறுப்பினராக இருக்கின்றேன். தென் கிழக்காசிய அரச குடும்பங்களிற்கிடையில் நட்புறவை ஊக்குவிக்கின்ற தென் கிழக்காசிய அரச குழுவிலும் உறுப்பினராகவும் உள்ளேன்.

ஒரு முறை நீங்கள் ராஜாவாகப் பிறந்தால் பிறரிற்காக கஸ்டப்பட்டு வேலை செய்யவேண்டி இருக்கும். உங்களுடைய தேவையகளை விட அவர்களுடைய ஈடுபாடுகளினை வைத்தே அணுகவேண்டி இருக்கும்.

பெயர்ந்து வாழும் பலரும் தங்களுடைய



நாட்டின் அனைத்து அரசியல் தமிழ் கைதிகளுக்கும் பொமன்னிப்பு வழங்கப்படுவதோடு குறைந்தபட்சம் மனிதாபிமான அடிப்படையிலாவது அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

தாய் நாட்டிற்குத் திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு தற்போது நாடு திரும்பியுள்ளவர்கள் ஒன்றிணைவதன் மூலம் நாட்டில் நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். மீண்டும் சொல்கிறேன் என் மனமும் இதயம் இலங்கையிலேயே உள்ளது. நம் எல்லோருக்கும் வாழ்க்கை என்பது ஒரு நித்திய போராட்டம். நான் மீண்டு வர பல வருடங்களாகப் போராடிக் கொண்டு உள்ளேன்.

**3. அரசபரம்பரைக்கு பின்னர் வந்த தமிழ் தலைவர்களில் யாரை சிறந்தவராக நீங்கள் கருதுகிறீர்கள்?**

நான் எந்த அரசியல் கட்சிக்குமோ அல்லது ராஜ ஆட்சிக்குமோ ஆதரவு இல்லை. அரசியல் வாதிகளுக்கு மக்களினுடைய வாக்குகள்தான் வேண்டும். பின்பு அவர்களைக் கண்டு கொள்வதில்லை. 2015 இல் தமிழர்களின் வாக்குகளால்தான் அரசாங்கமே மாற்றப்பட்டது. தமிழ் அரசியல் தலைவர்கள் அனைத்துப் முக்கிய பிரச்சினைகளயும் எழுத்து வடிவத்தில் கொண்டு வருவதுடன் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் ஒரு உடன்பாட்டிற்கும் வரவேண்டும்.

இன்று தமிழ் அரசியல்வாதிகள் ராஜதந்திரத்தின் அடிப்படையில் செயற்படுவதில்லை. அவர்கள் ராஜதந்திரம் என்றொரு வார்த்தை இருக்கின்றது என்பதையே மறந்துவிட்டனர்.

பலர் தலைவராக இருப்பதற்கும் கொடி பிடிப்பதற்குமே விரும்புகின்றனர். ஆனால் தமிழ் மக்கள் தங்களுக்கென்று ஒரு நந்திக் கொடி இருக்கின்றது என்பதை மறக்கக் கூடாது. 1970 இலிருந்து பல்வேறு தமிழ் இயக்கங்கள் தோன்றி அவற்றிற்கு தற்போது என்ன நடந்தது என்பதையும் நான் நினைவு படுத்தவேண்டியதில்லை என்று நினைக்கின்றேன்.

**4. உங்களிற்கு பிடித்த யாழ்ப்பாண உணவு எது?**

எனக்குப் பிட்டு, இடியப்பம், முருங்கைக் காய் கத்தரிக்காய்க் கறி ஆகியன பிடிக்கும். (மிகவும் பிடித்தது ராசவள்ளிக்கிழங்கு, பாயாசம் )

**5. யாழ்ப்பாணம் வந்தால் நிச்சயம் செய்தே தீர வேண்டும் என்ற தீராத ஆசையேதாவது உள்ளதா?**

நான் முதலில் என் தகவலில் குறிப்பிட்டது போலவே நான் ஆட்சி செய்வதற்கோ அல்லது மக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கோ கேட்கவில்லை. ஆனால் நான் நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை செய்ய இங்கே இருக்கின்றேன் என்பதைத் தெரியப் படுத்துகிறேன். நாங்கள் இளைய தலைமுறையினரை நாட்டில் முக்கிய பங்குவகிக்க முன்வருவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

ஒற்றுமையாக இருப்பதுவே நாட்டில் பிரகாசமான எதிர்காலமொன்றை உருவாக்குவதற்கான ஒரே வழி என்பதை அவர்களுக்கு புகட்ட வேண்டும். நாங்கள் தமிழ் மக்களிற்கு சுதந்திரமாகக் கதைப்பதற்கும் சம உரிமையுடன் தங்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

மாணவர்களினுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். நான் வடக்கு, கிழக்கு மற்றும் ஏலவே பின்நிற்கும் தெற்கையும் அபிவிருத்தி செய்வேன். நான் தமிழர்களுடைய வளமான பாரம்பரியத்தை மீண்டும் கொண்டு வருவேன். சில காலத்திற்குள் யாழ்ப்பாண இராச்சியம் (கோட்டை) திருத்தியமைக்கப்படும். அத்தோடு அந்த மகத்துவமான நாள் மக்களால் கொண்டாடப்படும் தினம் விரைவில் வரும் என்று நான் நம்புகின்றேன்.

**1. வடக்கு மாகாணசபைக்கு உங்களின் ஆலோசனை என்ன?**

பிறபகுதியிலிருந்து இலங்கையின் வடபகுதி ஒரு குழப்பமான நிலையிலேயே உள்ளது. ஆகவே வட மாகாணசபையை உறுதியாக நின்று தமிழ் மக்களினுடைய பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் எனவும் அத்தோடு வடமாகாணசபை வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றேன்.

**6. மைத்திரியை நேரில் சந்தித்தால் என்ன சொல்வீர்கள்?**

ஜனாதிபதி இலங்கையினுடைய அரசாங்கத்தையும் மக்களையும் புது முன்னடைவுகளை பெறுவதற்கு வழிநடாத்துவார் என நம்புகின்றேன். தமிழ் இன முரண்பாடு இன்னும் முழுமையாகத் தீர்கப்படவில்லை. தமிழ் மக்கள் சரியான அங்கீகாரம் பெறவேண்டும்.

நாட்டின் அனைத்து அரசியல் தமிழ் கைதிகளுக்கும் பொமன்னிப்பு வழங்கப்படுவதோடு குறைந்தபட்சம் மனிதாபிமான அடிப்படையிலாவது அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

ஊழல் தொடர்பான சட்டங்களைக் கடுமையாக இயற்றி ஊழலுக்கான தண்டனைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட ஊழல் குற்றவாளிகள் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும்.

**7. எப்பொழுது யாழ்ப்பாணம் வருகிறீர்கள்?**

இலங்கை திரும்புவதற்கான என்னுடைய தனிப்பட்ட பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு



இருக்கின்றது என்பதை நானறிவேன். இருந்தபோதிலும் இலங்கை அரசாங்க அதிகாரிகள் என் வருகைக்கான பாதுகாப்பை பொறுப்பேற்று நாட்டிற்கு வருவதற்கும் தங்குவதற்குமான ஏற்பாடுகளை உறுதி செய்தாலே நான் வரக் கூடும். இப்போதுவரை இனந்தெரியாக் குழுக்களாலோ அல்லது தனிப்பட்டவர்களாலோ எனக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நிலை உள்ளது.

**8. யாழ்ப்பாணத்தில் சமூகவிரோத செயல்கள் அதிகரித்து செல்வதை செய்திகளில் அறிந்திருப்பீர்கள். சிலகாலத்தின் முன்னர் பிபிசி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோது 'ஓரினச் சேர்க்கையாளர்களிற்கு மரணதண்டனை கொடுப்பேன்' என்ற சாரப்பட சொன்னீர்கள். யாழ்ப்பாணத்தில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவர்களிற்கு உங்களின் தண்டனை என்ன?**


ஓரினச்சேர்க்கையானது மரணதண்டனை விதிக்கப்படும் ஒரு குற்றமாக இன்னும் சில நாடுகளில் உள்ளது. அவர்களில் எத்தனை பேரைத் தண்டிக்க வேண்டும் அல்லது தண்டிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? நாம் மக்களிற்கும் இளைய தலைமுறையினருக்கும் நோய் ஆபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வைக் கற்றுக் கொடுக்கவேண்டும். ஏனெனில் இது உலகளாவிய ரீதியில் ஒரு பாரிய பிரச்சினை ஆகும்.

இலங்கை பெருவாரியாக ஒரு கல்வியறிவுள்ள நாடு. ஆனால் கடுமையான சமூக அமைப்பு மற்றும் பழமைவாத மதத் தரப்பு ஆகியன இந்தப் பிரச்சினையயை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கலாம். மேலும் படித்த சமுதாயத்தில் கூட ஓரினச் சேர்க்கையைப் பற்றிக் கதைப்பதென்பது ஒரு விலக்கப்பட்ட விடயமாகவே உள்ளது.

எய்ட்ஸ் தெற்காசியாவிலேயே ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. கிராமப் புறங்களில் ஒரு முறையான சுகாதார மருத்துவ உட்கட்டமைப்பு அவசியம் தேவை. அரசாங்கத்தினுடைய உந்துசக்தி மற்றும் முயற்சி ஆகியன முறையான சுகாதார வசதி, விழிப்புணர்வு இன்றி இறக்கும் மக்களைப் பாதுகாப்பதாய் அமையவேண்டும்.

நான் இலங்கையில் நிலவும் மோசமான எய்ஸ் நோய் நிலைமை குறித்து வருத்தப் படுகின்றேன். அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என விரும்புகின்றேன்.

**நேர்காணல்: ராமஜெயம்**
**மொழியாக்க உதவி: கௌதமி**





# எல்லோரும் என் பிள்ளையை கைவிட்டு விட்டீர்கள்

## முருகனின் தாயாரின் நெகிழ்ச்சி பேட்டி

**எஸ்.என்.நிக்ஸன்**

ராஜீவ்காந்தி கொலை வழக்கு என்றதும் நினைவுக்கு வருவது பேரறிவாளன், முருகன், நளினி.. அற்புதம்மாள். இந்திய ஊடகங்களின் வெளிச்சம் பட்டதெல்லாம் பேரறிவாளனையும், அற்புதம்மாளையும் சுற்றியே. ராஜீவ் கொலைவழக்கில் சிறையிலிருப்பவர்களை மீட்க அற்புதம்மாள் நடத்திய அறப்போரை மட்டுமே இந்திய ஊடகங்கள் கண்டுகொள்ள, முழுத்தமிழர்களிடமும் அற்புதம்மாளின் பெயர் பரிச்சயம். ஆனால் சோமணியை யாருக்கும் தெரியாது.

யாரிந்த சோமணி?

ராஜீவ் கொலைவழக்கின் முக்கிய குற்றவாளியாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவரே முருகன். இலங்கையின் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர். இந்த வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலிருக்கும் இன்னொரு கைதியான நளினியின் கணவன். அந்த முருகனின் தாயாரே சோமணி.

ராஜீவ் கொலைவழக்கில் முருகன், பேரறிவாளன் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்ட கணத்திலிருந்து சட்டப்போராட்டத்தை அற்புதம்மாளும், சோமணியும் ஆரம்பித்துவிட்டனர். ஆனால் அற்புதம்மாளின் அறப்போரை கண்டுகொண்ட அளவிற்கு, சோமணியின் அறப்போரை தமிழக ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தின் இத்தாவில் கிராமத்திலுள்ள தனது சொந்த வீட்டில் தங்கியிருந்து, ராஜீவ் கொலைவழக்கு கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பத்து இலட்சம் கையெழுத்து திரட்டும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரை ஒரு மாலைப்பொழுதில் சந்தித்தோம்.

**தீபம்: நீண்டகாலமாக இந்தியா, பிரித்தானியா என ஓடியோடி திரிந்துவிட்டு, சொந்த வீட்டிற்கு திரும்பியிருக்கிறீர்கள். எப்படி உணர்கிறீர்கள்?**

**சோமணி:** பல வருடங்களின் பின்னர் சொந்த வீட்டிற்கு வந்திருக்கிறேன். நீண்டகாலமாக இந்தியாவிலிருந்து சொல்ல முடியாதளவு சட்டப் போராட்டங்களை நடத்திவிட்டு, முதுமைக்காலத்தில் இங்கு வந்திருக்கிறேன். எல்லாவற்றையும் கைவிட்டு விட்டு வந்துவிட்டேன் என நினைக்காதீர்கள், முன்னர் இந்தியாவில் மட்டுமிருந்து போராடினேன். இனி இலங்கையிலுமிருந்து போராட போகிறேன்.

எனக்கு ஐந்து ஆண் பிள்ளைகளும், நான்கு பெண் பிள்ளைகளுமாக ஒன்பது பிள்ளைகள். முருகன் மூன்றாவது பிள்ளை. சொந்த இடத்தில் வந்திருந்தாலும், என் நினைப்பு முழுவதும் சிறையில் இருக்கின்ற என் பிள்ளை மீதுதான் இருக்கிறது. மாதாமாதம் இந்தியா போய் சிறையிலிருக்கும் பிள்ளையை பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். அவனையும் விடுதலை செய்துவிட்டால் நாங்கள் இங்கு வந்து சந்தோசமாக இருப்போம். இல்லையென்றால் எங்கள் வாழ்க்கையும் சிறைவாழ்கனை போலத்தான் முடியும்.

**தீபம்: மகனை மீட்பதற்கான உங்கள் நீண்ட போராட்டம் என்ன நிலையில் இருக்கிறது?**

**சோமணி:** என்னுடைய மகன் முருகன் உள்ளிட்டவர்கள் குற்றவாளிகளல்ல என்று நீதிமன்றமே முதல் விடுதலை செய்தது. ஆனால் மீண்டும் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்துள்ளார்கள். எனது மகனிற்கு இழைக்கப்பட்டது அநீதி. அதற்கெதிராக போராடுவேன். என்னுடைய உயிர் இருக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும். இதற்காக உயிரை துறப்பதற்கும் தயாராகத்தான் இருக்கின்றேன்.

இந்திய மீனவர்கள் இலங்கையில் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்;டால் அங்கு போராட்டங்கள் நடக்கின்றன. இதன் பின்னர் இலங்கை அரசுடன் கதைத்துப் பேசி அவர்களை இந்தியா மீட்கிறது. அதேபோல இந்திய சிறையில் இருக்கின்ற எனது மகன் உள்ளிட்டவர்களையும் இலங்கை அரசாங்கம்; கதைத்து மீட்க வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே நான் இலங்கைக்கு வந்திருக்கின்றேன்.

**தீபம்: நமது தமிழ் அரசியல்வாதிகள் முருகன் உள்ளிட்டவர்களை மீட்க ஏதாவது செய்கிறார்களா?**

**சோமணி:** உண்மையை சொல்லட்டுமா?... யாருமே அதுபற்றி அக்கறை காட்டவில்லை. பழைய அரசாங்கத்தின் காலத்தில் வாய்திறக்க முடியாதென்றால், இப்போதும் கதைக்க முடியாதா?

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டவர்களை விடுவிக்க கோரி தமிழகத்தில் நிறைய போராட்டங்கள் நடந்தன. பெரும்பாலான தமிழக தலைவர்களின் நிலைப்பாடு, சிறையிலிருப்பவர்கள் விடுதலையாக வேண்டுமென்பதே. ஜெயலலிதா அம்மாவின் நிலைப்பாடும் அதுதான். ஆனால், நமது அரசியல்வாதிகளின் நிலைப்பாடுதான் என்னவென்பது தெரியவில்லை.

**தீபம்: நீங்கள் ஒரு இலங்கைத்தமிழர். என்றாலும், உங்கள் மகன் முருகனின் விடுதலைக்கு இங்குள்ள அரசியல்வாதிகள், பொதுஅமைப்புக்கள், மக்கள் குரல் கொடுக்கவில்லையென்ற வருத்தம் உள்ளதா?**

**சோமணி:** இருக்கும்தானே. எனது பிள்ளை இந்தச்சனங்களிற்காகத்தான் வாழப் போனவன். ஆனால் இறுதியில் யாரும் அவனைத் திரும்பிப்பார்க்கவில்லை. யாரும் ஒரு வார்த்தை பேசவில்லை. வருத்தம் இருக்காதா?

ஆனால் தமிழகத்தில் அப்படியில்லை. அங்குள்ள அரசியல்வாதிகளும், மக்களும் சிறையிலிருப்பவர்களிற்காக போராடுகிறார்கள். ஒருவர் தனது உயிரையே மாய்த்துள்ளார். அவரது படத்தைத்தான் நான் ஒவ்வொருநாளும் கும்பிடுகிறேன்.

**தீபம்: சரி... முருகனின் விடுதலைக்காக அடுத்து எப்படியான முயற்சிகள் செய்யப் போகிறீர்கள்?**

**சோமணி:** இந்தியாவிலுள்ள பல அரசியல்வாதிகளை சந்தித்து சிறையிலிருக்கும் பிள்ளைகளின் விடுதலைக்கு உதவும்படி கேட்டுள்ளேன். அவர்கள் நிறைய உதவி செய்கிறார்கள். அடுத்தது, இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளை சந்தித்து பேசப்போகிறேன்.



> **ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டவர்களை விடுவிக்க கோரி தமிழகத்தில் நிறைய போராட்டங்கள் நடந்தன. பெரும்பாலான தமிழக தலைவர்களின் நிலைப்பாடு, சிறையிலிருப்பவர்கள் விடுதலையாக வேண்டுமென்பதே.**

வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் ஐயாவில் நிறைய நம்பிக்கை வைத்துள்ளேன். அவரை விரைவில் சந்திக்க முயற்சிக்கிறேன். அவர் ஏதாவது உதவுவார் என்ற நம்பிக்கையுள்ளது. அதேபோல, பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளேன்.

சிறையிலிருப்பவர்களை விடுவிக்க கோரி பத்து இலட்சம் கையெழுத்து சேர்க்கும் போராட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளேன். பத்து இலட்சம் கையெழுத்தை திரட்டிக் கொண்டு மைத்திரிபால சிறிசேனாவை சந்திக்கவுள்ளேன். அவர் மூலம் இந்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கலாமென நம்புகிறேன்.



கணபதிப்பிள்ளை அசோகன்
Asokan 2301@gmail.com




# உட்புகுந்த வலசைப்பறவைகள் உள் நாட்டுக்குள் பரம்பல் அடையும் விதம்

அத்தியாயம்6இல்இலங்கைக்குள் வலசைப்பறவைகள் உட்புகும் 5 புள்ளிகளையும் தெளிவாக விளங்கப்படுத்தியிருந்தேன். அதற்குரிய சாராம்சத்தை விளக்கும் வரிப்படம் இந்த அத்தியாயத்தில் தரப்பட்டு உள்ளது. குடிபெயர் பருவகாலத்தின் ஆரம்பத்தில் இவ்வாறு உட்புகும் பறவைகள் அந்த அந்த இடங்களில் அந்த குடிபெயர் பருவகாலம் பூராக இருக்கின்றனவா?, அல்லது அவை மேலும் தமது பயணத்தினை தொடர்கின்றனவா? என்பதனை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம். மேலும் அவை எந்தெந்த இடங்களுக்கு எந்தெந்த பாதையினூடாக போகின்றன என்றும் பார்ப்போம். எல்லாப் பறவைகளும் அந்த இடத்தில் குடிபெயர் பருவகாலம் முழுவதும் நிற்பதில்லை என்பதை வல்லையில் நாம் செய்த ஆய்வுகள் நிறுவியுள்ளன.

இந்த அனுமானத்துக்குக் காரணமான அவதானமாக அமைவது தொண்டமனாறு கடல் நீரேரிகளிலும் முல்லைத்தீவு சாலே கடல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் குடிபெயர் பருவகால ஆரம்பங்களில் பறவைகள் பெருந்தொகையாகக் காணப்பட்டமையும், பறவைகளின் எண்ணிக்கையும், இவைகளின் பன்மையும் வேறுபட்டமையும் ஆகும். இதற்கு பெரிய பூநாரை மிகச் சிறந்த உதாரணம் ஆகும். அதேவேளை சில பறவைக் கூட்டங்கள் குடிபெயர் பருவகாலம் முழுவதும் அந்தப் பிரதேசங்களில் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை உறுதிப்படுத்துவதற்கு முறையான விஞ்ஞான படிமுறையின் ஊடாக அவதானங்கள் செய்ய வேண்டும். குடிபெயர் பருவகால முடிவுறும் மாதங்களான மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களிலும் இதே மாதிரியான மாற்றங்கள் எண்ணிக்கையிலும், இனங்களின் பன்மையிலும், இந்தப் பிரதேசங்களில் அவதானிக்கப்படுகின்றது.

**கரையோர தொடர் பயணம்.**

யாழ்குடா நாடு மற்றும் முல்லைத்தீவு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் (இந்தப் பெயரைக் கவனியுங்கள், கொக்குத் தொடுகின்ற கடல் நீரேரி வாய்) அதாவது குடிபெயர்ந்து வருகின்ற பறவைகள் முதன்முதலில் இலங்கையில் தொடுகின்ற இடங்கள் ஆகியவற்றில் உள் நுளையும் பறவைகளில் சில (இனத்துக்கு இனம் இவை வேறுபல) தொடர்ந்தும் இலங்கையின் கிழக்குக் கரையோரமாக போய் இலங்கையில் மிகவும் பிரபலமானதாக பிரசித்தப் படுத்தப்பட்டுள்துமான குமண மற்றும் யால பிரதேசத்திற்குப் போகின்றன. (உண்மையில் கடந்த 30 வருடங்களாக பெரிய அளவில் முன்னேற்றகரமான முறைமைகளைப் பயன்படுத்தி வட பகுதியில் பறவைகள் ஆய்வுகள் செய்யப் படாதபடியால் அவர்கள் தங்களுடைய பிரதேசத்திலேயே முக்கியமான பறவைப்பிரதேசம் என்று கூறுகின்றனர்.) இதற்குரியபடம் இலங்கைத் தேசப்பட வரிப்படத்தில் அம்புக்குறிகளைப் பயன்படுத்தி இங்கு காட்டப்பட்டுள்ளது.

இதே மாதிரி வெவ்வேறு பாதைகளை பறவைகள் தேர்ந்தெடுத்து உள்நாட்டுக்குள் போகின்றன. இங்கு ஒரு முக்கியமான அம்சம் என்னவெனில் உள்நாட்டுக்குள் பறவைகளில் பெரும்பாலானவை நீர்ப்பறவை அல்லாதவை (அதாவது அவை காட்டுப்பறவைகள்) ஆகும். இவை உட்புகுந்த பிரதேசத்தில் இருந்து மேலும் தெற்குத் திசைக்குப் போய் அதில் வரும் ஆறுகளின் ஆற்று முகத்தினூடாக உள்நாட்டுக்குள் செல்லும். இதற்கு உதாரணமாக அமைவது கிண்ணியா மற்றும் மூதூரில் உள்ள மகாவலி முகத்துவாரம் ஆகும். இதன் ஊடாக சிறிய குடிபெயர் பறவைகள் கூட்டம் கூட்டமாக குடிபெயர் பறவை பருவ காலத்தின் ஆரம்பம் மற்றும் இறுதி மாதங்களில் போய் மற்றும் வந்து கொண்டிருப்பது அதனை அவதானித்து அனுபவிக்கத் தெரிந்தவர்களுக்கும் ஒரு புதுமையான மற்றும் மகிழ்ச்சிகரமான அனுபவம் ஆகும்.


இறக்குவானைக் குன்றுகளின் ஊடாக குடிபெயர் பறவைகள் பறப்பு.


இலங்கையின் குடிபெயர் பறவைகள் இரசிப்பு, அவதானிப்பு, மற்றும் ஆய்வில் ஈடுபடுகின்ற மாணவர் மற்றும் பொது மக்கள் எல்லோரும் தத்தமது வாழிடத்தின் அடிப்படையில் தமது பங்களிப்பை வழங்கலாம். இதில் ஆய்வுகளில் அவதானிக்கப்படும் ஆவணப்படுத்தப்பட்ட மிகவும் சுவாரஸ்யமான இடம் மலைநாட்டில் உள்ள இறக்குவானைக் குன்றுகளுக்கு இடையில் காணப்படும் கணவாய் ஆகும். இங்கு பறவைகள் கூட்டமாக செல்லுதல் ஒரு அழகிய காட்சி ஆகும். அவ்வாறு அவை இறக்குவானைக் குன்றுகளுக்கு இடையிலான பள்ளத்தாக்கு பிரதேசங்களுக்கு ஊடாக வருகின்றன. இது எனது நீண்டகால அவதானத்தின் அடிப்படையில் கிடைத்த தகவல் ஆகும். இலங்கையின் மேற்குக் கரையில் உட்புகும் பறவைகளில் ஒரு தொகுதியினரே இந்த இறக்குவானை குன்றுகளின் ஊடாகச் செல்கின்றன. என அவதானிக்கப்பட்டுள்ளன. அவை களுகங்கைக்கும் முகத்துவாரத்தின் ஊடாக இரத்தினபுரியைத் தாண்டி சிங்கராஜ வனத்தினூடாக இறக்குவானைக் குன்றுகளுக்கு இடைப்பட்ட பள்ளத்தாக்குகளினூடாக செல்லுகின்ற காட்சி இறக்குவானைக் குன்றுகளுக்கு ஊடாக செல்லும் போக்குவரத்துப் பாதைகளில் நின்று மாலை நேரங்களில் மாலை வெய்யிலில் இயற்கை அழகை இரசிக்கும் போது மிக இரம்மியமாக இருக்கும் ஆனால் இதனை அனுபவித்து இரசிப்பதற்கு அவை எப்போது போய் வரும் என்ற கணிப்பும், பொறுமையும், அவதானிக்கும் திறனும் வேண்டும். இந்த வர்ணனை இறக்குவானைக் குன்று வாழ் மக்களுக்கும் இறக்குவானைக் குன்று மலையோரமாக பயணம் செய்பவர்களுக்கு சமர்ப்பணம்.


**இந்த அத்தியாயத்தை முடிக்க முன்னர்**

இன்றுடன் முடியும் முதல் ஏழு அத்தியாயங்களில் குடிபெயர் பறவைகள் பற்றி அவை எங்கு எங்கு அவற்றின் வருடவாழ்க்கை வட்டத்தின் பருவகாலங்களைக் கழிக்கின்றன, அவை ஏன் இரண்டு பிரதேசங்களை தெரிந்தெடுத்துள்ளன?, என்னென்ன காரணங்கள் அவற்றின் பறத்தலைத் தூண்டுகின்றன?, எந்தெந்த பாதைகளால் வந்து போகின்றன?, வரும் போது அவை எதிர்நோக்கும் ஆபத்துக்கள்?, இலங்கைக்கு எந்தெந்தப் புள்ளிகளில் உட்புகுகின்றன?, பின்னர் அவை எங்கெங்கு நிலையிடம் எடுக்கின்றன. என்ற விடயங்களைப் பார்த்தோம். அதாவது இப்போது இலங்கையில் நிற்கும் குடிபெயர் பறவைகள் அந்த அந்த இடங்களுக்கு வந்து விட்டன. அவை போகும் வரை தொடர இருக்கும் இந்தக் கட்டுரைத் தொடரில் (மார்ச், ஏப்ரல் வரை எமது கள அவதானிப்பு மற்றும் பதிவுகள் அதனை முடிவு செய்யும்) இனி வரும் அத்தியாயங்களில் விசேட தலைப்புக்களாக உள்ள வடபகுதி குடிபெயர் பறவைகள் வாழிடங்களின் விசேட பண்புகள், அந்த வாழிடங்களை பாதுகாக்க செய்ய வேண்டிய ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடுகள், வடபகுதி குடிபெயர் ஆய்வுகளின், பறவைகளின் இன்றைய நிலையும், எதிர்கால சாத்தியம் ஆகிய விடயங்களைப் பற்றி தனித்தனியாகப் பார்ப்போம்.

**(அடுத்த வாரமும் வலசைப் பறவைகள் பறக்கும்)**








# தொழில்பக்தியிருந்தால் வெற்றிபெறலாம்

## அல்பா மிக்சர் உரிமையாளர் பாலமுருகன்

முழு தமிழர்களின் சுவைக்கும் நொருக்குத்தீனி போட்டுக் கொண்டிருக்கிறது அல்பா மிக்சர். அம்மா என்று அழைக்காத உயிரில்லை என்பதை போல அல்பா மிக்சர் என்ற பெயரை உச்சரிக்காத, வாயில் மென்றிருக்காதவர்கள் இல்லையெனலாம். அப்படி நம்மவர்கள் அனைவரின் நாவையும் கட்டிப்போட்டு வைத்துள்ளது அல்பா மிக்சர்.

இன்று சுவைகளின் சாம்ராஜ்யமாக உருவாகியுள்ள அல்பா மிக்சரின் பயணம் மிக நீண்டது. சிறிய மிக்சர் கடையொன்றை ஆரம்பித்து, இப்பொழுது மிக்சர் என்றாலே அல்பா மிக்சர் என்ற நிலையை எட்டிய, பாலமுருகனை அண்மையில் சந்தித்தோம்.

'செய்யும் தொழில் பக்தி, என்ன சிரமமெனிலும் நம்பிக்கையிழக்காமை' இதுதான் தனது வெற்றியின் ரகசியமென்கிறார் பாலமுருகன்.

'எனது சொந்த இடம் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு. நான் பிறந்தபோது குடும்பமே நல்ல கஸ்ரத்தில் இருந்தது. இதனால் கல்வியையும் முழுமையாக தொடர முடியால் பாதியில் நிறுத்த வேண்டியதாகி விட்டது. ஆனால் நான் சோரவில்லை. ஏதாவதொரு இலக்கையடைய வேண்டுமென்ற வெறியால் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன்' என்று கடந்தகாலத்தை அசைமீட்டார்.

'ஆரம்பத்தில் ஒரு ரயர்கடையில் வேலைக்கு சேர்ந்தேன். அந்த அனுபவங்களை வைத்து பின்னர் மானிப்பாயில் சொந்தமாக ரயர்கடையொன்று திறந்தேன். 1995 யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது அதை விட்டுவிட்டு ஓட வேண்டியதாகிவிட்டது. 1996 இல் திரும்பி வந்து பார்த்தபோது கடை முற்றாக அழிந்திருந்தது. என்ன செய்யலாமென யோசித்த போதுதான், உறவினர்கள் மிக்சர் கடை நடத்துவது மனதில் உறைத்தது. மிக்சர் கடை நடத்தலாமென முடிவு செய்து, பரமேஸ்வராச்சந்தியில் சிறிய கடையொன்று தொடங்கினேன்' என அல்பா மிக்சரிற்கு விழுந்த விதையைப் பற்றி சொன்னார்.

'ஆரம்பத்தில் தொழில் மந்தகதியில்த்தான் சென்றது. நினைத்த மாதிரி ஒன்றும் நடக்கவில்லை. நான் தொழிலை ஆரம்பித்தபோது மிக்சர் மக்கள் மத்தியில் அவ்வளவு பிரபல்யமும் இல்லை. ஆனால் நான் சலிக்கவில்லை.



அந்த சமயத்தில், மக்கள் மிக்சர் வாங்க பின்னடிக்கிறார்கள் என கடைகாரர்கள் சொன்னார்கள். எனது உற்பத்திகளுடன் எல்லா கடைகளிற்கும் ஏறி இறங்கினேன். எனது மிக்சரை போட்டு பாருங்கள் என கடைகாரர்களிற்கு நம்பிக்கை கொடுத்தேன். ஆரம்பத்தில் அவை விற்பனையாகாமல் என்னிடமே திரும்பி வந்தன. ஆனாலும் நான் அலுக்கவில்லை. நட்டத்தை பார்க்காமல் மீண்டும் மீண்டும் அந்தக் கடைகளிற்கு மிக்சர் போட்டேன். ஏனெனில் மக்களிற்கு மிக்சரை பழக்கப்படுத்த வேண்டுமல்லவா. இறுதியில் நான் நினைத்தது நடந்தது. மிக்சர் மெல்லமெல்ல எல்லோரிடமும் அறிமுகமாகி விட்டது' என்றார்.

ஆரம்பத்தில் மிக்சர் விற்பனையாகாமல் சிரமப்பட்டவர் இன்று மிக்சரின் அடையாளமாக மாறி விட்டார். யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடக்கு, கிழக்கு முழுவதும், கொழும்பு என தமிழர்கள் இருக்கும் எல்லா இடங்களிலும் இன்று அல்பா மிக்சர் உள்ளது. கேள்விக்கு தக்கதாக உற்பத்தி செய்ய முடியாத பிரமாண்ட சந்தையை அல்பா மிக்சர் உருவாக்கிவிட்டது.

யாழ்ப்பாண றோட்டரிகழகம் வழங்கிய 'தொழில்திறன்' விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

'நாம் செய்யும் தொழிலில் பக்தி வைக்க வேண்டும். எந்த கஸ்ரம் வந்தாலும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். நமக்கான நேரத்தை கண்டுபிடிக்கும் வரை அமைதியாக தேடிக் கொண்டிருப்பதில்த்தான் வெற்றியின் சூட்சுமம் தங்கியுள்ளது' என்கிறார் பாலமுருகன். இதனால்த்தான் வாடகை இடத்தில் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட அல்பா மிக்சர் என்ற நிறுவனம் இன்று பிரமாண்ட சொந்தக்கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மக்களிற்கு பரிச்சயமற்ற விடயம் என்றாலும், உண்மை உழைப்பும், உறுதியுமிருந்தால் வெற்றிபெறலாமென்பதற்கு அல்பா மிக்சரும் ஒரு உதாரணம்.

'நாம் செய்யும் தொழிலில் பக்தி வைக்க வேண்டும். எந்த கஸ்ரம் வந்தாலும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். நமக்கான நேரத்தை கண்டுபிடிக்கும் வரை அமைதியாக தேடிக் கொண்டிருப்பதில்த்தான் வெற்றியின் சூட்சுமம் தங்கியுள்ளது'



கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் உடல ஆரோக்கிய விருத்தி தேசிய வாரத்தையொட்டி உடற்பயிற்சி நிகழ்ச்சி நடந்தது. இதில் கலந்து கொண்ட ஒருவர் பணப்பொதியொன்றை தவறவிட்டுவிட்டார். கல்முனை ஸாஹிர தேசிய கல்லூரியின் 10ம் ஆண்டு மாணவனொருவர் அதனை கண்டெடுத்து பிரித்து பார்த்துள்ளார். அதில் 2 இலட்சம் ரூபா பணமிருந்துள்ளது. உடனே நிகழ்ச்சி நடந்த மேடைக்கது சென்று, அங்கிருந்த அமைச்சரிடம் பணப்பொதியை ஒப்படைத்துள்ளார். மாணவனின் செயலை எல்லோரும் வெகுவாக பாராட்டியுள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர். முத்தையா கதிர்காமநாதன்**

தமிழுக்கும், இந்து சமய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய முத்தையா கதிர்காமநாதனுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவத்துக் கொள்கின்றோம்...

**தீபம் குழுமம்**







இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 07.02.2016 அன்று வெளியிடப்பட்டது